# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 25 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20


## தமிழ்நாட்டில் எண்ணற்ற சிக்கல்கள் தலை விரித்தாடுகின்றன..

**ஆயிரம் ஆண்டுகளாய் ஆரியம் செய்துவரும் கேடுகளாலும், நூற்றாண்டுகளாய்ப் பன்னாட்டு முதலாளியம் இழைத்து வரும் சுரண்டல் அதிகாரத்தின் கொடுமைகளாலும் ஏற்பட்டிருக்கிற நோய்கள் தமிழ்க் குமுகத்தில் முற்றிவருகின்றன..**

சாதி வெறித் தாண்டவமாடுகிறது.. மதப்பித்தையும், மதவெறித்தனத்தையும் ஆர் எஸ் எஸ் இன் பரிவாரங்கள் திட்டமிட்டு வளர்க்கின்றன..

அரம்பத்தனங்களை அரவணைத்து வளர்க்கின்றன பாஜக உள்ளிட்ட சாதி, மதவெறிக் கட்சிகள்..

சாலைகளில் சுங்கச்சாவடி என்கிற பெயரில், ஜிஎஸ்டி என்கிற பெயரில், கனிம வளங்களை, கடல் வளங்களை எல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு போகிறது இந்திய அரசு..

**தமிழ்நாடு மட்டுமன்றி இந்தியாவில் உள்ள மொழி மாநிலங்கள் அனைத்தையும் அடக்கி ஒடுக்கி அடையாளம் இல்லாமல் செய்து வருகிறது இந்தியப் பார்ப்பனியம். தமிழர்கள், கன்னடர்கள், பஞ்சாபியர்கள், காஷ்மீரிகள் என்று யாரும் அவரவர் இனத்தின் பெயர்களைக் கல்விச் சான்றிதழ்களில், வேறு அரசு பதிவுகள் எவற்றிலுமே செய்து கொள்ள முடியாது..**

**கல்வி உரிமை, தொழில் உரிமை, வணிக உரிமை, கருத்துரிமை என அனைத்தையும் ஒடுக்கி இந்திய அரசு தன் அதிகாரத்தின் கீழ்க்கொண்டு போய் விட்டது..**

**ஆளுநரின் அடங்காப்பிடாரி அதிகாரத் தன்மைகள் மாநில அரசுகளை ஆட்டிப்படைத்து வருகின்றன..**

மாநில உரிமைகளை முதன்மைப்படுத்திக் குரல் கொடுக்காத இந்தியக் கட்சிகள் எவற்றையும் மாநிலங்களில் செயல்படவிடக்கூடாது..

தமிழ்நாட்டின் அடையாளங்களையே தமிழ்நாட்டு அரசு முதன்மைப்படுத்திச் செயல்படுத்த வேண்டும்..

**திருவள்ளுவ அறத்தையும், வள்ளலார் நெறியையும் தமிழ்நாடு எங்கும் பரப்பியாக வேண்டும்.**

**விவேகானந்தரையும் அரவிந்தரையும் பயன்படுத்தி ஆரியப் பார்ப்பனியம் செய்து வருகிற தமிழிய அழிப்பு வேலைகளை முழுமையாகத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்..**

வேங்கைவயல் உள்ளிட்ட சாதி வன்மக் கொடுமைகள் நடந்த வெறியாட்டங்கள் மீது திமுக அரசு சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை..

பல்கலைக்கழக உரிமைகள், நீட் - உள்ளிட்ட கல்வி உரிமைகளை மீட்பதற்கு ஆளுங்கட்சியான திமுக அனைத்துக் கட்சிகளையும், இயக்கங்களையும் இணைத்துக் கொண்டு இந்திய அரசை எதிர்த்துப் பெரும் போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டும்..

கஞ்சா உள்ளிட்ட வெறி மயக்கப் பொருள்களை இரும்புக் கை கொண்டு நசுக்கத் தவறி வருகிறது தமிழ்நாடு அரசு..

ஊடகவியலாளர் என்கிற போர்வையில் நடக்கும் அரம்பத்தனங்களின் மீது நடவடிக்கை எடுக்கும் அரசு, சாதி வெறி அரம்பத்தனங்களுக்கு எதிராக வலுவான நடவடிக்கைகளை எடுக்கவில்லை..

கல்விக்கூடங்கள் கொள்ளையடிப்பதற்கான மிகப்பெரும் வணிக நிறுவனங்களாக மாற்றப்பட்டிருக்கிற நிலையில் அரசுப் பள்ளிகளின் தரங்களை உயர்த்தி அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தி வளர்த்து வருகிற தமிழ்நாட்டு அரசின் சில நடவடிக்கைகளைப் பாராட்டும் அதே சூழலில், தமிழைப் பாட மொழியாக, பயிற்று மொழியாக ஆக்குவதில் எந்த முன்னெடுப்பையும் செய்யாமல் இருப்பது கண்டனத்திற்குரியது.. தமிழைப் பாட மொழியாகக்கூட வைக்காத பள்ளிகள் தமிழ்நாட்டில் இயங்குவதைத் தமிழ்நாட்டு அரசு தடை செய்தாக வேண்டும்..

# சாதித்தீ பற்றியெரியும் தீவட்டிப்பட்டி

## உண்மை அறியும் குழு அறிக்கை.

சேலம் தீவட்டிபட்டி மாரியம்மன் கோவில் ஆலய நுழைவு மறுப்பும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரங்கள் குறித்து முற்போக்கு, சனநாயக இயக்கங்களின் கள ஆய்வு அறிக்கை.

### உண்மை அறியும் குழுவில் பங்கேற்றோர் -

தோழர் கொளத்தூர் மணி தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம், தோழர் கண. குறிஞ்சி ஒருங்கிணைப்பாளர், சமூகநீதிக் கூட்டமைப்பு, தோழர் மருதுபாண்டியன் சோசலிச மையம், தோழர் தமயந்தி தமிழ்நாடு முற்போக்குப் பெண் வழக்கறிஞர்கள் சங்கம், தோழர் வளர்மதி SUMS, தோழர் மாரியப்பன் தமிழ்த்தேச மக்கள் முன்னணி, தோழர் கோ.சீ.மணி, தோழர் மூர்த்தி தலைவர், நல்வழிக்கழகம், தோழர் அருண்சோரி க.க. மா-லெ-மா, தோழர் கண்ணன்

சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி பெரிய மாரியம்மன் கோவில் திருவிழாவை ஒட்டி மே 2 / 2024 அன்று நடந்த சாதிய வன்முறைகளைத் தொடர்ந்து, முற்போக்கு, சனநாயக அமைப்புத் தோழர்கள் மே 11 ஆம் நாளன்று நேரடியாகச் சம்பவ இடத்திற்குச் சென்று நாச்சினாம்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பு மக்களையும், தீவட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களையும், தீவட்டிப்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் (Investigation Officer - I.O.) திரு.ஞானசேகரன் அவர்களையும் சந்தித்ததன் அடிப்படையில் இந்த ஆய்வறிக்கை முன் வைக்கப்படுகிறது.

### தீவட்டிப்பட்டி சிற்றூர் அமைப்பு

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டத்தில் தீவட்டிப்பட்டி கிராமம் உள்ளது. இங்கு பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த வன்னியர், சோழிய வேளாளர், நாயக்கர், போயர், உடையார் உள்ளிட்ட சுமார் 1000 குடும்பத்தினர் வசிக்கின்றனர். அருந்ததியர் சமூக மக்களும் வன்னியர் பகுதிக்கு அருகிலேயே வாழ்கின்றனர். இவர்கள் சுமார் 15 முதல் 20 குடும்பங்கள் வரை இருக்கின்றனர். இஸ்லாமிய சமூகத்தினரும் வாழ்கின்றனர். தீவட்டிபட்டிக் கிராமத்திற்கு மிக அருகில் நாச்சினம்பட்டி என்ற கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் சுமார் 200 ஆதி திராவிடர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயக் கூலித் தொழிலாளர்களாகவும், நூறு நாள் வேலைத் திட்டத்தில் கூலிகளாகவும் வேலை செய்து வருகின்றனர்.

### கோயில் திருவிழா

தீவட்டிப்பட்டியில் ஒரு மாரியம்மன் கோவில் உள்ளது. இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் இந்தக் கோவில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இங்கு சித்திரைத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இது வரை நடைபெற்ற திருவிழாக்களில் பட்டியலின மக்களும் பங்கேற்று வந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. திருவிழா ஏழு நாள்கள் நடைபெறும். இவ்வாண்டு அதன்படியே ஏப்ரல் 29ஆம் நாள் தொடங்கி மே 5 ஆம் நாள் நிறைவுறுவதாக இருந்தது. முதல் நாள் திருவிழா கங்கணம் கட்டுவது. அன்று தலித்துகளுக்குத்தான் முதலில் கங்கணம் கட்டுவது வழக்கம். பிறகு கொடிக்கம்பம் ஏற்றுதல், தீர்த்தக்குடம், கூழ் ஊற்றுதல், அலகு குத்துதல், தேர்த்திருவிழா, வாணவேடிக்கை, மஞ்சள் நீராட்டம், பாட்டுக் கச்சேரி என நிகழ்வுகள் நடைபெறும். இறுதி நிகழ்வாகக் கணக்குப் பார்த்தல் மற்றும் ஊர்ப் பெரியவர்களை மேளதாளங்களுடன் வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தல், விருந்து வைத்தல் ஆகியவற்றுடன் திருவிழா முடிவடைகிறது. இந்த விழாவிற்கான செலவினங்களுக்குத் தீவட்டிப்பட்டி பிற்படுத்தப்பட்ட சாதி மக்களிடையே மட்டும்தான் வரி வசூலிக்கின்றனர். நாச்சினம்பட்டி தலித் மக்கள் காலங்காலமாகவே வரி கொடுப்பதில்லை. கோவில் நிர்வாகக் குழுவினரும் கேட்பதில்லை. இது நெடுங்காலமாக பின்பற்றப்பட்டு வரும் நடைமுறை மரபு.

மாரியம்மன் கோவிலில் முக்கியமான சடங்கு சக்தி அழைத்தல். இந்நிகழ்வின் போது பறையர் சமூக மக்கள் குடியிருப்பில் உள்ள கோவிலில் இருந்து பூவை எடுத்துச் சென்று தீவட்டிபட்டி மாரியம்மன் கோவிலில் வைத்துப் பூஜை செய்வது வழக்கமான ஒன்று. இந்த ஆண்டும் அப்படியேதான் விழா தொடங்கியிருக்கிறது.

தலித் மக்களுக்குத்தான் முதலில் கங்கணம் கட்டுவது முறை. ஆனால் இந்த ஆண்டு அவர்களுக்கு அந்த மரியாதையைச் செய்ய மறுத்த பூசாரி, "உங்களுக்கெல்லாம் கங்கணம் கட்ட முடியாது" என்று கூறிக் கங்கணத்தைத் தூக்கி வீசி உள்ளார். இந்நிகழ்ச்சிகளுக்கு முன்பே தலித் மக்களுக்கு இத்திருவிழாவில் பங்கேற்க அனுமதி கிடையாது என்ற ஒரு தகவல் வந்ததாக அய்யம்மாள், ( வயது 30 ) கூறினார். எனவே இது தற்செயலான நிகழ்வாகத் தோன்றவில்லை, முன்கூட்டியே ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து தலித்துகளைத் திருவிழாவில் பங்கேற்க விடக்கூடாது என முடிவெடுத்துள்ளனர் என்றே தெரிகிறது.

### கோயில் திருவிழாப் பிரச்சனையின் விவரம்

மே 1, 2024 - அலகு குத்தும் நிகழ்ச்சி : திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான அலகு குத்துதல். மாலை 5 மணி தொடங்கி 7.30 மணிக்குள் மற்றவர்கள் சடங்கு முடிந்த பிறகு தலித் மக்களுக்கு அலகு குத்துவது நடைமுறையாக உள்ளது. இதன்படி இந்தாண்டு தலித் பெண்கள் ஐந்து பேர் அலகு குத்த ஆறு மணிக்குக் கோவிலுக்குச் சென்றுள்ளனர். இம்முறை திட்டமிட்டபடி இவர்களுக்கு அலகு குத்துவதைத் தாமதப்படுத்தி உள்ளனர். இரவு 10 மணி வரை காக்க வைக்கப்பட்ட பின்பு பெண்கள் முறையிட்டதன் பேரில் வேறு வழி இல்லாமல் அலகு குத்தியுள்ளனர். வழக்கமாக அலகு குத்துபவர் குத்தாமல் வேறு ஒருவர் குத்தியுள்ளார். இது முடிந்த பிறகு தலித் மக்கள் கோவிலைச் சுற்றி வரும்பொழுது, வன்னிய சமுகத்தினர் தங்களின் சாதிப் பாடலை ரேடியோவில் போட்டும், மின் விளக்கை அணைத்தும் உள்ளனர். சுற்று முடிந்து கோவில் வாசலுக்கு வந்த பொழுது பூசாரி வம்படியாகத் திரைச்சீலையை இழுத்துக் கருவறையை மூடி உள்ளார். இதன் தொடர்ச்சியாகச் சேலம் அரசுக் கல்லூரியில் படித்து வரும் சூர்யா என்ற தலித் இளைஞர் அம்மனை வழிபட ஆலயத்தில் சென்ற பொழுது அவரைக் கோவில் பூசாரி வெளியே தள்ளி விட்டுள்ளார். இச்சம்பவத்தினைக் கண்ட சூர்யாவின் உறவினர் கேள்வி கேட்ட பொழுது, "நீங்கள் கோவிலின் உள்ளே வரக் கூடாது" என்று பூசாரி கூறியுள்ளார். மேலும் அர்ச்சனை செய்வதற்காகக் கோவிலுக்குள் தலித் மக்கள் நுழைவதைத் தடுக்கும் வகையில் கோவில் வாசல் கதவை மூடியும், வன்னியர் சாதி உட்பட மற்ற மேல் சாதிப் பெண்கள் சுமார் 40 முதல் 50 பேர் கோவில் வாசலில் உட்கார்ந்தும் வழி மறித்துள்ளனர். அங்கிருந்த மாரியம்மன் கோவில் நிர்வாகிகள், குறிப்பாக பா.ம.க வைச் சேர்ந்த வெங்கடேசன், சின்னாக்கவுண்டர் ஆகியோரும்,

சாதியாதிக்கவாதிகளும் இதைச் செய்துள்ளதாக அனைவரும் குறிப்பிட்டனர். இந்த அநீதிக்கெதிராக பட்டியலின மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். அப்போது அங்கு 150க்கும் மேற்பட்ட தலித் மக்களும் 200க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களும் கூடியுள்ளனர். ஆனால் அதற்கு முதல் நாள் பால்குடம் எடுத்து வழிபடும் நிகழ்ச்சியில் தலித் மக்கள் உட்பட அனைவரும் ஆலயத்திற்குள் நுழைந்துதான் வழிபாடு செய்துள்ளனர். அதற்கு மறுநாள் அலகு குத்தி எடுக்கும் நிகழ்ச்சியின் போது மட்டும் கோயிலுக்குள் விடாமல் தகராறு செய்துள்ளனர்.

### உண்மை அறியும் குழுவின் பரிந்துரைகள்

● தீவட்டிப்பட்டிக் கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். ● ஆதிதிராவிடர் பகுதியில் தேவையில்லாமல் பலர் மீது பொய் வழக்குகள் திரும்பப் பெறப்பட வேண்டும். ● காவல் துறை தாக்குதலால் காயம் பட்டு இருப்பவர்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சை அரசு பொறுப்பில் வழங்கப்பட வேண்டும். ● காவல்துறைக் கண்காணிப்பை அதிகரிப்பதோடு, தொடர்ந்து இரவு நேரத்தில் வந்து இளைஞர்களைக் கைது செய்யும் நடைமுறை உடனடியாக நிறுத்த வேண்டும். ● தீவட்டிப்பட்டியில் அமைதி திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும். எடுக்கப்பட வேண்டும். ● சக்தி மாரியம்மன் கோயில், தமிழ்நாடு அறநிலைத்துறையின் கீழ் இருந்தாலும் வன்னியர்கள் தங்களது ஆதிக்கத்தில் அதைக் கையகப்படுத்திக் கொண்டிருப்பது ஏற்கத் தக்கதல்ல. எனவே அறநிலையத் துறை கோயிலைத் தனது பொறுப்பின் கீழ் கொண்டுவர வேண்டும். மேலும் கோயில் நிர்வாகக் குழுவில் ஆதி திராவிட மக்களுக்கு உரிய பிரதிநித்துவம் தரப்பட வேண்டும். ● சக்தி மாரியம்மன் கோயில் அறநிலையத் துறையின் கீழ்தான் உள்ளது என்பது பற்றிய அறிவிப்புப் பலகை, கோயிலில் வைக்கப்பட வேண்டும். ● சக்தி மாரியம்மன் கோயில் பூசாரி பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்தவராக இருப்பதை மாற்றிச் சுழற்சி முறையில் அமைக்க வேண்டும். ● தீவட்டிப் பட்டி அரசுயர் பள்ளியில் மாணவர்களிடையே கஞ்சா போன்ற போதைப் பொருள் பயன்பாடு அதிக அளவு இருப்பதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். அதை முற்றிலும் ஒழித்துக்கட்டத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ● இந்தக் கலவரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த ஆட்டையாம்பட்டி ஒன்றியச்செயலாளர் வெங்கடேசன் என்பவருக்கு மிக முக்கியப் பங்கு இருப்பதாகத் தெரிய வருகிறது. அவர் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். ● ஆதிதிராவிட சமுதாயத்திலுள்ள பெண்கள் பலருக்கு 100 நாள் வேலைதான் வாழ்வாதாரமாக உள்ளது. ஆனால் அவர்கள் வேலைக்குச் செல்வதற்கும் அஞ்சி வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். அவர்களிடைய நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். ● காவல் துறை பக்கச்சார்பாக நடந்து கொண்டுள்ளது மிகத்தெளிவாகத் தெரிகிறது. பெண்களையும், சிறுவர்களையும் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தி உள்ளனர். இத்தகைய அராஜகச் செயலில் ஈடுபட்ட காவலரைக் கண்டறிந்து அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ● பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு இழப்பீடு வழங்குவதோடு, தீக்கிரையாக்கப்பட்ட கடைகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். ● கோயில் விழாவினை எதிர்வரும் காலத்தில் அறநிலையத் துறையின் கண்காணிப்பின் கீழ் நடத்த வேண்டும். ● ஆதிதிராவிடர் பகுதியில்இவ்வளவு கடுமையான பாதிப்பு இருந்தும், காவல்துறை அதன் அடிப்படையில் வழக்கு எதுவும் பதிவு செய்யாதது ஏற்கத் தக்கதல்ல. ● கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கோவில்களில் பட்டியலின மக்கள் தங்கள் வழிபாட்டு உரிமையை வலியுறுத்தும் போதெல்லாம், அந்தக் கோயில்கள் பூட்டப்படுவதும், சீல் இடுவதும்தான் நடைமுறையாக இருந்து வருகிறது. ஆதிக்க சாதிகளைச் சார்ந்தவர்களும் தாங்கள் வழிபாடு நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் சரி, பட்டியலின மக்களை அனுமதிக்காமல் இருந்தால் போதும் என்ற அவர்களின் கருத்துக்கு அது ஏற்பளிப்பதாக ஆகிவிடுகிறது. எனவே இனி எந்த ஓர் அறநிலையத் துறை சார்ந்த கோயிலிலும், பொதுக் கோவில்களிலும் இதுபோன்ற பட்டியலின மக்களின் வழிபாட்டு உரிமை தடுக்கப்படும் போது அரசு வன்கொடுமைத்தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி வழக்குகள் பதிவதோடு, அதற்குக் காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# முன்னமே மென்று துப்பிய இந்தியத்தின் தீர்வுகளைப் பேசுவது தமிழ்த்தேசியம் ஆகுமா?

**பேராசிரியர் த செயராமன்**
நெறியாளர், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக வீழ்த்தப்பட வேண்டும் என்று ஒரு வழிகாட்டுதலை தேர்தலில் பங்கேற்கும் மக்களுக்கு தமிழக மக்கள் முன்னணி வழங்கியதற்கு ஒரு ஆழமான காரணம் இருக்கிறது. இப்போது 303 உறுப்பினர்களை மக்களவையில் பெற்றிருக்கக் கூடிய பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் நரேந்திர மோடி கிட்டத்தட்ட ஒரு முடிசூடா மன்னரைப் போல, ஒரு சர்வாதிகாரியைப் போல, தான் நினைத்ததெல்லாம் செய்து வந்திருக்கிறார். காங்கிரஸ் ஆட்சி காலத்தின் போது சனநாயகத்தின் போதாமைகள், தாக்குதல்கள், அத்துமீறல்கள் போன்றவை பற்றிய குற்றச்சாட்டுகள் எழுந்தன. ஆனால் 2014 - இலிருந்து நடந்து கொண்டிருப்பதே வேறு. அரசு நடைபெற்றது என்று கூறுவதை விட, மோடியின் எதேச்சதிகாரம் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். எந்த சனநாயக முறைமைக்குள்ளும் அடங்காத ஒரு இந்து மதவாத எதேச்சதிகார ஆட்சி 10 ஆண்டுகளாக நடைபெற்று வந்திருக்கிறது. இஸ்லாமியர்களும், பிற சிறுபான்மையினரும், தலித்துகளும் கடுமையானத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

அசாமில் 40 லட்சம் பேர் குடியுரிமை பறிக்கப்பட்டு முகாம்களிலும், வெளியிலுமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். நரேந்திர மோடியின் ஆட்சி மீண்டும் ஏற்படுமானால் இவர்கள் நாட்டை விட்டு வெளியே துரத்தப்படுவார்கள். இந்திய நாடாளுமன்றத்தில் கார்ப்பரேட் முதலாளிகளே இப்போது உறுப்பினர்கள். கனிமவள சூறையாடலும் இயற்கை வள அழிப்பும் வளர்ச்சி என்ற பெயரில் இனி முழுவீச்சில் நடைபெற இருக்கிறது. இதுவரை நடந்த, நடத்தப்பட்ட பேரழிப்புகள் மட்டுமின்றி, வரும் காலத்தில் நடைபெற இருக்கின்ற பேரழிப்புகள் கூடுதலானவை. திகிலூட்டும் சட்டங்கள், திடீர் சட்டங்கள் போன்றவற்றை முன்னறிவிப்பு இன்றி நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார். எதிர்க்கட்சிகள் அனைத்தும் கையை பிசைந்து கொண்டு நின்றன, அல்லது அவையை விட்டு வெளியேறி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தன. இது இப்போது உள்ள நிலை.

ஆனால் இன்னொரு முறை பாரதிய ஜனதா கட்சி தேர்தலில் வெற்றி பெறுமானால், இந்திய அரசியல் சட்டத்தை முற்றிலுமாக மாற்றி அமைத்து, இதுவரை போற்றப்பட்ட பாராளுமன்ற சனநாயக அடித்தளமே அடித்து நொறுக்கப்பட்டு விடும். மாற்றாக குடியரசு தலைவர் முறை என்ற பெயரில் இந்துத்துவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்திக் கொள்ளும் திட்டத்தை முன்னமே தயார் நிலையில் வைத்துக் கொண்டுதான், இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அது ஈடுபடுகிறது. அதனால்தான், மக்களுக்கு ஆழ்ந்த கவலையோடு ஒரு வழிகாட்டுதலை காட்ட வேண்டி இருந்தது.

## எதிர்காலத்திட்டமும், மூன்று நடைமுறைகளும்

இந்துராஷ்டிரப் படைப்புக்கு இன்னும் 15 ஆண்டுகளே உள்ளன என்று ஆர்.எஸ்.எஸ் கெடு நிர்ணயித்து வேலை செய்து கொண்டு வரும் வேளையில்தான் 2024 - நாடாளுமன்றத் தேர்தல் குறுக்கே வந்தது. ஆர்.எஸ்.எஸ் தன் நீண்டகால இந்துராஷ்டிரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மூன்று நடைமுறை திட்டங்களை கடைபிடித்து வருகிறது.

### ( 1 ). பார்ப்பன எதிர்ப்பு கருத்தியல் தகர்ப்பு

கடந்த கால பார்ப்பனியத்தை, இந்துத்துவத்தை, மதவாதத்தை, சாதியத்தை எதிர்த்து கருத்துருவாக்கம் செய்தவர்களின் கருத்தியலையும் அவர்களது தத்துவத்தையும் தகர்த்து விடுவது. அதற்கான ஆள் பலம், பண பலம், அதிகார பலம் - அவ்வளவையும் ஆர் எஸ் எஸ் கடந்த சில ஆண்டுகளாகக் களமிறக்கி வேலை செய்து வருகிறது. ஒருபுறம் திருவள்ளுவர், வள்ளலார் போன்ற பல்வேறு தேசிய இனங்களின் அறிவுச் சான்றோர்களை உள்வாங்கிச் செரிப்பது. இந்துத்துவத்தால் ஏற்க முடியாத, செரிக்க முடியாத பெரியார் போன்ற சிந்தனாவாதிகளின் கருத்தியல்களைச் சிதைப்பது; மக்களிடம் அவர்களை அன்னியப்படுத்தி அப்புறப்படுத்த முயற்சிப்பது. பார்ப்பனிய சமூகக் கட்டமைப்பான வர்ணாச்சிரம சாதியக் கட்டமைப்பைத் தளர்ச்சி நீக்கி மீட்டுருவாக்கம் செய்வது. அதே நேரம் சாதியத்தை எதிர்ப்பவர்களை தமிழர் எதிரிகளாகக் காட்டுவது. எழுதாத சிலேட்டுகளாக இருக்கும் இளைஞர்களிடம் தங்களுடைய எடுபிடிகள் மற்றும் முகவர்கள் மூலம் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பாளர்களை எதிரிகளாகக் காட்டிப் பிரச்சாரம் செய்வது. இதுவரை தமிழ்ச் சமூகத்துக்கு அரணாகவும் பார்ப்பனியத்துக்கு எதிராகவும் இருந்த கருத்தியலை தமிழர்களுக்கு எதிரான கருத்தியலாக அவதூறு பேசுவது. இப்பணி பல்வேறு மாநிலங்களில் நடந்து கொண்டிருக்கிறது.

ஆரியத்தால் செரிக்க முடியாத கருத்தியலாளராகவும், பார்ப்பன எதிர்ப்பு அரசியல் வழிகாட்டியாகவும் இருந்தவர் தந்தை பெரியார். அவருடைய பெயரை சிதைப்பது என்ற பணியில் பார்ப்பன அமைப்புகளும், வட இந்தியச் சார்பு அமைப்புகளும், இந்துத்துவ அமைப்புகளும், பார்ப்பன - பனியா வணிக - முதலாளிய நிறுவனங்களும், சாதிவெறி அமைப்புகளும், தமிழ்த் தேசியம் அல்லாததை தமிழ்த் தேசியம் என்று புரட்டல் வேலைகளைச் செய்யும் அமைப்புகளும் ஒன்றுபட்டு வேலை செய்கின்றன. இவர்களுக்கு ஆகும் அவ்வளவு செலவுகளையும் ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் பின்புலமாக இருக்கும் உள்நாட்டு வெளிநாடு வாழ் இந்துத்துவ அமைப்புகளும் ஏற்றுக் கொள்கின்றன. எதிர்ப்பு இல்லாத எதிர்காலச் சந்தையை மனதில் கொண்டு மார்வாடி - பனியா முதலாளிகள் கொட்டிக் கொடுக்கிறார்கள்.

1927 - ஆம் ஆண்டு பெரியார் தன் சுயசாதிப் பெயர் பின்னொட்டை கழற்றி விட்டெறிந்ததைத் தொடர்ந்து ஒட்டுமொத்த தமிழகமுமே பெயருக்கு பின்னால் சாதியை போட்டுக் கொள்வதைப் புறக்கணித்தது. இப்போது 97 ஆண்டுகளுக்குப் பிறகு, "என் பெயருக்கு பின்னால் என் சாதியை போட்டுக் கொள்வதில் உனக்கென்ன பிரச்சனை?" என்று ஆர்.எஸ்.எஸ் முகவர்கள் குரல் எழுப்புகிறார்கள். எழுந்து கொண்டிருக்கும் இந்துராஷ்டிரத்தின் முன்னறிவிப்பாக இத்தகைய குரல்களைக் கருதலாம். தமிழினத்தின் உரிமையை, சுயத்தை, ஓர்மையைப் பாதுகாக்க வேண்டிய இளைஞர்கள் எந்தத் தெளிவும் பெறாதவர்களாக இருக்கிறார்கள். சாதிப் பெருமை பேச முற்படுகிறவர்களை எதிர்க்க வேண்டிய இவர்கள் சாதியே தமிழினத்தின் அடையாளம் என்று பார்ப்பன பண்பாட்டு மீட்டுருவாக்கத்திற்குத் துணை நிற்கிறார்கள். பெரியார் என்ற கவசம் தமிழ்ச் சமூகத்தை எவ்வளவு காலம் காத்துவிடும் என்று நாம் கூற முடியாது. ஏனெனில் திராவிட தேர்தல் கட்சிகள் பெரியாரியல் வரைமுறைகளில் சரியாக ஊன்றி நிற்கவில்லை. பலர் சாதியத்தையும் கைவிடவில்லை. பெரியாரையும் திராவிடக் கருத்தியலையும் உடைக்கும் பார்ப்பன சேவையில் இன்று பல்வேறு சாதி அமைப்புகளும், தமிழ்த் தேசிய சிதைப்பு அமைப்புகளும் தீவிரப் பங்காற்றி வருகின்றன.

### ( 2 ) இந்துத்துவ ஒருங்கிணைப்பு

இரண்டாவதாக, நாட்டின் அனைத்து அமைப்புகளும் கட்சிகளும் சாதிக் கட்சிகளும், சாதி அமைப்புகளும், ஆன்மீக அமைப்புகளும், இந்து மதவாத அமைப்புகளும், கிராம பூசாரிகள் அமைப்புகளும், பல்வேறு பெயர்களில் இயங்கும் கலைக் குழுக்களும், உள்ளூர் விளையாட்டுக் கழகங்களும், இலக்கிய அமைப்புகளும், "பாரதமாதா பஜனை, ஜெய்ஸ்ரீராம்" முழக்கத்தை முன்வைத்து ஒருங்கிணைக்கப்படுகின்றன, பல்வேறு சமயச் சிறுபான்மையருக்கும் தாங்கள் சிறுபான்மை மதத்தில் இனிமேலும் இருப்பது எவ்வளவு ஆபத்தானது என்று இந்துத்துவ வெறியர்களால் உணர்த்தப்படுகிறது. தாய் மதம் திரும்பு என்று வெளிப்படையாக ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் துணை அமைப்புகள் இஸ்லாமியர், கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றன. "சாத்தானின் பிள்ளைகளே. என்று இஸ்லாமிய, கிறித்தவரை அன்பொழுக அழைக்கிறார்களாம்.

ஈரோடு மாவட்டத்தில் வள்ளிக்கும்மி பல்லாயிரம் பெண்களை உள்ளடக்கியதாக விரிவடைந்திருக்கிறது. கொங்கு மண்டலமான ஈரோடு, கோவை, திருப்பூர், கரூர் மாவட்டங்களில் தொடர்ந்து வள்ளிக்கும்மி என்ற பெயரில் கவுண்டர் சமூகப் பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். தன் சாதியிலேயே திருமணம் செய்வோம் என்று பெண்களை உறுதிமொழி எடுக்கச் செய்கின்றனர். சாதியப் பாதுகாப்பு, இந்துத்துவ வளர்ச்சி, ஆர்.எஸ்.எஸ் இலக்கு நோக்கிய நகர்வு என இதில் பங்கேற்கும் பெண்கள் அறிந்ததும், அறியாததுமாக பல இலக்குகள் உள்ளன.

"சத்தியம் சத்தியமே,
சின்னமலை சத்தியமே!
கல்யாணம் செய்துக்கிறோம், கவுண்டர் வீட்டு பையனையே!
இது போதும், இது போதுமே,
எனக்கு வேறு ஏதும் வேண்டாம், அம்மா!"

என்ற உறுதிமொழி வீடியோ இந்துத்துவ வர்ணாச்சிரம கட்டமைப்பை மீட்டுறுதி செய்யும் முயற்சிகளுக்கு சான்றுகள் ஆகும். வள்ளிக்கும்மி போன்ற கலைகளை சாதியப் போர்வைக்குள் அடக்கும்போக்கு இந்துராஷ்டிரம் நோக்கிய பயணத்தின் ஒரு பகுதியாகும். குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்த பெண்கள் மட்டுமே இதில் சேர்க்கப்படுகிறார்கள். சமூகநீதி பேசும் கட்சிகள் இதைக் கண்டும் காணாமலும் இருப்பது இந்த போக்கை வளர்த்தெடுக்க உதவுகிறது. மங்கை வள்ளி கலைக்குழு, மகாமாரியம்மன் வள்ளிக் கும்மி கலைக்குழு, கொங்குநாடு கலைக்குழு போன்றவை மட்டுமே பல்லாயிரம் பெண்களின் மூளையை சாதிய மயப்படுத்தி இருக்கின்றன.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு இந்தியா முழுவதும் ஷாகாக்களை நடத்துவது போலவே, பல்வேறு கலை அமைப்புகள் மூலமும், சிலம்பாட்டம் உடற்பயிற்சி கழகங்கள் மூலமும், ஆண்களும் பெண்களும் இந்துத்துவ இந்தியாவுக்கு ஏற்றவர்களாக பதப்படுத்தப்படுகிறார்கள்.

**( 3 ). இந்துத்துவ, சனாதனக் கருத்துப்பரவல்**

மூன்றாவதாக, மோடியின் இந்திய ஒன்றிய அரசு வகைதொகை இல்லாமல் கருவூலத்தை இந்துத்துவ இந்தியாவைப் படைக்க திறந்து விட்டிருக்கிறது. சனாதன இந்தியாவை வளர்த்தெடுக்கும் பணி பல்வேறு அரசியல் அமைப்புகளுக்கும், கட்சிகளுக்கும், சாதி அமைப்புகளுக்கும், மத அமைப்புகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததிலிருந்து தூர்தர்ஷனில் ஆர் எஸ் எஸ் நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. தனியார் வலைதளங்கள், சமூக ஊடகங்கள், முகநூல்கள், யூ-டியூப் வலைதளங்கள் தொடர்ந்து இத்திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றன. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செயல்பாடுகள் முன்பை விட தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களிலும் அதிகரித்துள்ளன. மகாபாரதம், இராமாயணம் ஆகிய தொடர்கள் ஒளிபரப்பப்பட்ட பிறகு மதக் கலவரங்களும், மசூதி இடிப்புகளும், இந்துத்துவ சார்பு வன்முறைகளும் அதிகரித்தன. இப்போது மீண்டும் அந்த உத்தி பின்பற்றப்படுகிறது. மதச்சார்பற்ற கட்சிகள் ஆர்.எஸ்.எஸ் அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளன. பிரெண்ட்ஸ் ஆஃப் இந்தியா, விஷ்வ ஹிந்து பரிஷத் போன்றவை வெளிநாட்டில் இருந்து செயல்படுகின்றன.

நரேந்திர மோடி அரசு அமைந்த பிறகு பல மாநிலங்கள் பசுவதைத் தடுப்புச் சட்டங்களைக் கடுமையாக்கின. இப்போது பசுக்காவலர்கள் படுகொலைகளை நிகழ்த்த முடிகிறது. இஸ்லாமியர் மீது அவதூறுகளை நரேந்திர மோடி என்ற பிரதமரும் தடையின்றி அள்ளி வீசுகிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் ராஜஸ்தானிலும் மற்றும் பல மாநிலங்களிலும் நரேந்திர மோடி பேசிய வெறுப்பை உமிழும் பிரச்சாரத்தை உலகமே அதிர்ச்சியோடு கண்டனம் செய்திருக்கிறது.

2023 - இல், ஆர்.எஸ்.எஸ்.அமைப்பு தமிழ்நாட்டில் 16 இடங்களில் ஊர்வலம் நடத்த உயர்நீதிமன்ற மதுரை கிளை அனுமதி அளித்தது. ஆர்.எஸ்.எஸ்□ இன் செயல்பாடுகளை எந்த அரசும் தடுத்துவிட முடியாத சூழ்நிலை எழுந்துள்ளது. தமிழக ஊடகங்கள் ஆர்.எஸ்.எஸ் - க்குச் சார்பாக செயல்படாவிட்டால் அவை கடும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. தமிழக ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. வீரபாண்டியன் என்ற மூத்த ஊடகவியலாளர் சன் டிவியில் இருந்து வெளியே அனுப்பப்பட்டார். இந்து பத்திரிக்கை சித்தார்த்த வரதராஜனை வெளியேற்றியது. ஊடக விவாதங்களில் சங்கிகளுக்கு முன்னுரிமை தரப்பட்டு உரையாடல்கள் நிகழ்த்தப் படுகின்றன. சங்கி ஊடகவியலாளர் மாரிதாஸ் கொடுத்த பட்டியல்படி ஊடகங்களில் இருப்பவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். புதிய தலைமுறை, வேந்தர் டிவி, காவிரி டிவி, கேப்டன் டிவி முதலியவற்றி லிருந்து பலர் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 2014 - இல் நரேந்திர மோடி ஊடக மேலாளர்களை டெல்லிக்கு அழைத்துப் பேசி, உபசரித்து அனுப்பி வைத்தது, தொந்தரவுகளின் தொடக்கமாக அமைந்தது.

**ஆர். எஸ்.எஸ். என்ற பயங்கரவாத அமைப்பின் பிடியில் இந்தியா**

எந்த பயங்கரவாத அமைப்பும் பயங்கரவாத அமைப்பு என்று பெயர் சூட்டிக் கொண்டதில்லை. ஆர் எஸ் எஸ் அமைப்பும் அப்படிப் பெயர் சூட்டிக் கொண்டதில்லை. ஆனால் இன்று உலக அளவில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட பயங்கரவாத அமைப்பாக ஆர்எஸ்எஸ் வளர்ந்திருக்கிறது. ஆனால், அதை நிரந்தரமாகத் தடை செய்ய முடியவில்லை. இதுவரை மூன்று முறை தடை செய்யப்பட்டாலும், இந்தியாவில் குறுகிய காலத்தில் மீண்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 1962 குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்க பிரதமர் ஜவஹர்லால் நேருவே அனுமதித்து அழைத்தார். 1971 - இல் இந்தியா □ பாகிஸ்தான் போரின் போது ஆர்எஸ்எஸ் செய்த பணிகளை இந்திரா காந்தி ஏற்றுக் கொண்டார். காங்கிரஸ் கட்சியின் தலைமைகள் ஆர் எஸ் எஸ் எதிர்ப்பாளர்களாக இருக்கவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் பலர் ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள்; இப்போதும் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் நிலை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. சனாதனத்தையும், ஆர்.எஸ்.எஸ் - ஐயும் எதிர்க்க வேண்டும் என்று ஓரளவு புரிதல் இருந்தாலும்கூட, பெரியாரின் பெயரைச் சொல்லும் கட்சிகளாலும் 100 விழுக்காடு சரியாக தங்கள் கொள்கைப்படி நடந்து கொள்ள முடியவில்லை. மாநிலத்தில் நயந்தும், பயந்தும், அவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டியிருக்கிறது.

இந்திய அளவில், அனைத்துத் துறைகளும் ஆர்எஸ்எஸ் மயமாக்கப்பட்டிருக்கின்றன. 1986 முதல், தேசியவாதிகள் என்று கூறிக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனம் சங்கல்ப் பவுண்டேஜன் என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. 2020 - இல் தேர்ச்சி பெற்றவர்களில் 61% இதில் பயிற்சி பெற்றவர்கள். கடந்த ஆண்டுகளிலும் ஆர் எஸ் எஸ் சித்தாந்தம் புகட்டப்பட்டவர்கள் ஆட்சிப்பணி தேர்வுகளில் வெற்றி அடைந்திருக்கிறார்கள். 2018 - இல் தேர்ந்தெடுக்கப்பட்ட 990 பேரில் 649 பேர் இந்த அமைப்பால் தயார் செய்யப்பட்டவர்கள். 2017 - இல் 1999 பேரில் 689 பேரும், 2016 - ஆம் ஆண்டு 178 பேரில் 648 பேரும், 2015 - ஆம் ஆண்டு 1236 பேரில் 670 பேரும், ஆர் எஸ் எஸ் அமைப்பால் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு தொடர்ந்து வழிகாட்டும் குருமார்கள் ஆர்.எஸ்.எஸ் காரர்கள்தான். இராணுவத்தில் ஆர்எஸ்எஸ் காரர்கள் முழுவதுமாக ஊடுருவியிருக்கிறார்கள். 2020 - இல் உத்தரப்பிரதேசத்தில் முதல் இராணுவப் பள்ளியை ஆர்எஸ்எஸ் தொடங்குவதாக அறிவித்தார்கள். இராணுவப் பள்ளிகளாகிய சாய்னிக் (Sainik) பள்ளிகள் ஆர்எஸ்எஸ் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்திய இராணுவத்தை இந்து மதவெறி இராணுவமாகக் கட்டமைக்கிறார்கள். 1961 - முதல், அரசு கட்டுப்பாட்டில் இயங்கிய இப்பள்ளிகள் இப்போது 63% ஆர்.எஸ்.எஸ் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஒரு பள்ளி அதானியிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. பாபர் மசூதி இடிப்பில் பங்கேற்ற சாத்வி ரிதம்பரா கட்டுப்பாட்டில் இரண்டு பெண் குழந்தைகளுக்கான சாய்னிக் பள்ளிகள் இருக்கின்றன. இவை மட்டுமல்ல; எத்தனை நிர்வாகத் துறைகள் இருக்கின்றனவோ, அத்தனையிலும் ஆர்எஸ்எஸ் - இடம் களப்பயிற்சியும் தத்துவார்த்த பயிற்சியும் பெற்றவர்கள் ஊடுருவி விட்டார்கள். இந்துத்துவ இந்தியாவுக்கான மொழியாக இந்தியும் வளர்த்தெடுக்கப்படுகிறது.

தமிழ் உள்ளிட்ட மொழிகளைப் பின்னுக்குத் தள்ளி சமஸ்கிருதத்திற்கும் இந்திக்கும் மிக அதிகமாக இந்திய ஒன்றிய அரசு செலவிட்டு வருகிறது. 'காசித் தமிழ் சங்கமம்' என்றும் பல்வேறு வகையிலும் தமிழை விழுங்கவும், சமஸ்கிருதத்தை தமிழர்கள்மீது திணிக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் தொடங்கப்படுகிறது.

2014 முதல் 2022 வரை தமிழுக்கு 74 கோடிகளும், சமஸ்கிருதத்துக்கு 1488 கோடியும் செலவிடப்பட்டிருக்கிறது. 2019 - 20 நிதியாண்டு பட்ஜெட்டில், இந்தி ஆசிரியர்கள் நியமனத்திற்கு 50 கோடி ஒதுக்கப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடையும் வரை வெளியிடப்பட்ட பணத்தாள் ஒரு ரூபாய் முதல் 500 ரூபாய் வரை, இந்தி மொழி பணத்தாள்களில் இடம் பெற்றதே இல்லை. ஆனால், இந்தியா விடுதலை பெற்ற பிறகு அனைத்துத் துறைகளிலும் இந்தியே ஆட்சி செய்கிறது.

**இந்துத்துவக் கூட்டணிகள்**

2024-க்கு முன்பாகவே, ஆர்எஸ்எஸ் பல மாநிலங்களிலும் பல்வேறு கட்சிகளுடன் இந்துத்துவக் கூட்டணி அமைத்திருக்கிறது. பாஜகவுடன் கூட்டு சேரத்தயாரான கட்சிகளையும், சாதி அமைப்புகளையும் விலைக்கு வாங்குகிறது. மாநிலங்களில் தேர்தலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை விலைக்கு வாங்கி ஆட்சி அமைக்கிறது. தேர்தல் கட்சிகளையே விலைக்கு வாங்குகிறது. "ரூபாய் 1000 கோடி, 15 மக்களவை இடங்கள், 2026 இல் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவி" என்றெல்லாம் பா.ஜ.க.பேரம் பேசியதாக நாம் தமிழர் கட்சித் தலைவர் ஊடகங்களில் கூறினார்.

(தினகரன் 3 ஏப்ரல் 2024). ஆர்.எஸ். எஸ். தலைவர்களால் தமிழ்நாட்டின் தலைவர்களிடம் இப்படி நெருங்கிப் பேச முடிகிறது. ஆர் எஸ் எஸ். உடன் தொடர்ந்து பல தலைவர்கள் உறவில் இருந்து வருகிறார்கள். என்ன பேசுகிறார்கள், என்ன திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியாது. பாஜகவுக்கு எதிரான மனநிலை தமிழ்நாட்டில் உள்ளதால், பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சி நாம் தமிழர் என்று காட்டுவதற்காக அதிக முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் நாம் தமிழர் கட்சியின் திட்டங்கள் அனைத்தும் ஆர்எஸ்எஸ் திட்டங்களாகவே இருந்து வருவது பலருக்கு வியப்பை ஏற்படுத்தியது.

"இந்தியா முழுவதும் இந்து முகத்தோடு போ" என்று கூறும் ஆர்எஸ்எஸ் "தமிழ்நாட்டிற்கு தமிழ் முகத்தோடு போ" என்று கூறுகிறது. இந்தியா முழுவதும் இராமன் என்ற அடையாளத்தை உயர்த்திப் பிடிக்கும்போது, தமிழ்நாட்டில் முருகன் மற்றும் வேல் என்ற அடையாளத்தை உயர்த்திப் பிடிக்கக் கூறுகிறது. திட்டங்கள் அனைத்தும் ஆர் எஸ் எஸ் வகுத்தளித்தபடியே நடத்தப்படுகின்றன.

**ஆர்.எஸ். எஸ் அரசியல் திட்டம்**
**இந்திய அரசியல் சட்டத்திற்குப்பதில் இந்து ராஷ்டிர அரசியல் சட்டம்**

இவர்களுக்கு ஓர் அரசியல் திட்டம் தொடக்கக் காலம் முதல் இருந்து வருகிறது. அதுதான் இந்திய அரசியலமைப்பை ஒழித்துக் கட்டிவிட்டு, இந்துராஷ்டிரத்திற்குப் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது. 2019 செப்டம்பர் 17-ஆம் நாள் சத்தியம் நியூஸ் தொலைக்காட்சியில் நெல்லையில் அமித் ஷா பேசிய பேச்சு காட்டப்பட்டது .

"70 ஆண்டுகளாக பல கட்சி சனநாயக ஆட்சி முறை நடைமுறையில் உள்ளது. பல கட்சி நாடாளுமன்ற ஆட்சி முறை தோல்வி அடைந்து விட்டது"-என்று அமித்ஷா பேசுகிறார்.

பல கட்சிகள் மற்றும் பல்வேறு தேசிய இனங்களுக்கான கட்சிகள் தனித்தனியே இருப்பதை ஆர்எஸ்எஸ் அமைப்பு விரும்பவில்லை. பல தேசிய இனங்கள், பல மொழிகள், பல்வேறு பண்பாடுகள் இருக்கக்கூடிய ஒரு நாட்டிற்கு, நாடாளுமன்ற சனநாயக முறை மட்டுமே பொருந்தும் என்பதால்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதியபோது நாடாளுமன்ற சனநாயக முறையை வகுத்தளித்தார்கள். அந்த நாடாளுமன்ற சனநாயகம் என்பது முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பது ஆர் எஸ் எஸ் அரசியல் திட்டம். 2019 செப்டம்பர் மாதம், டெல்லியில் பேசும் போது, அமித் ஷா,

> "70 years after Independence, the people of the nation had doubts in their mind, if the multi-party parliamentary democratic system has failed" (இந்தியா விடுதலை அடைந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த தேசத்தின் மக்களுடைய சிந்தனையில், பல கட்சி நாடாளுமன்ற சனநாயக முறை தோற்றுவிட்டதோ என்ற சந்தேகங்கள் இருந்தன"
> *- Deccan Herald, 20 November 2022*

குஜராத், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட பிரதமர் நரேந்திர மோடி குடியரசுத் தலைவர் முறையை உருவாக்க வேண்டும் என்று பேசினார். இதுபோல கடந்த எட்டு ஆண்டுகளாகப் பேசி வந்திருக்கிறார். "ஒரு தேசம், ஒரு தேர்தல்" என்ற முறையை வலியுறுத்தும் மோடி வகையறாக்களின் திட்டம் இப்போது இருக்கும் நாடாளுமன்ற சனநாயகத்தை ஒழித்துக்கட்டிவிட்டு ஓர் இந்து வெறியன், ஓர் இந்திக்காரன் மட்டுமே எப்போதும் அதிகாரம் செலுத்தும் வகையில், குடியரசுத் தலைவர் முறையைக் கொண்டு வருவதுதான். இதை அவர்கள் மறைத்துப் பேசவில்லை. "வெஸ்ட்மின்ஸ்டர் முறையாகிய பாராளுமன்ற சனநாயகம் குடியரசுத் தலைவர் முறையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்" என்று மோடி பேசியிருக்கிறார். அதாவது, இன்று பின்பற்றப்படும் முறை இங்கிலாந்திலிருந்து வந்ததாம். அது கூடாதாம். இப்படிப் பேசுவது பாஜகவுக்குப் புதிதல்ல. கடந்த காலத்தில் பா.ஜ.க.வின் முந்தைய வடிவமான சனசங்கம் காலத்திலும் இதே கருத்து முன் வைக்கப்பட்டது.

இதே நோக்கத்துடன், முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயி வழி நடத்திய இந்துத்துவ அரசு ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி எம்.என். வெங்கடாசலயா தலைமையில் ஒரு தேசிய ஆணையத்தை அமைத்தது. இந்திய அரசியல் சட்டத்தின் செயல்பாட்டை மீள்ஆய்வு செய்வதற்காக அது அமைக்கப்பட்டது. முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் உள்ளிட்ட முக்கியமானவர்கள் அந்த ஆணையத்தைப் பற்றி, அதன் நோக்கம் பற்றி விமர்சித்தனர். ஆகவே, எடுத்துக்கொண்ட வேலை குறித்து வெங்கடாசலையாக கமிஷன் நேரடியாக எதுவும் பேசவில்லை.

பாரதிய ஜனதா கட்சி குடியரசுத் தலைவர் முறையைக் கொண்ட ஒரு புதிய அரசியல் சட்டத்தை ஆதரிப்பது பற்றிய கட்டுரையை பிஸினெஸ் ஸ்டாண்டர்டு இதழ் (Business Standard, August 21 2023) வெளியிட்டது. இது, இந்திய நாடாளுமன்ற சனநாயகத்தை ஒழித்துக் கட்டி விட்டு ஆர். எஸ். எஸ்□இன் திட்டமான குடியரசுத் தலைவர் முறையைக் கொண்டு வருவது பற்றிய விவாதத்தை மீண்டும் தொடங்கி வைத்தது. ஆர். எஸ். எஸ்.

மற்றும் பா.ஜ.க.வுடன் தொடர்புடையவர்கள் எழுதிய இரண்டு கட்டுரைகள் விரிவான விவாதத்தைத் தொடங்கி வைத்தது. ஒரு கட்டுரையை எழுதியவர் இந்தியா பவுண்டேஷனின் இயக்குநர்; மற்றொருவர் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவில் உள்ளவர்.

2019 ஜூன் 21 அன்று presidential system.org வெளியிட்ட செய்திக்கட்டுரை கவனத்தில் கொள்ளத்தக்கது. பானு தமிஜா என்பவர் Why India needs the presidential system? (இந்தியாவிற்கு குடியரசுத் தலைவர் முறை ஏன் அவசியம்?) என்ற நூலை எழுதியவர்.

11.4.2019 அன்று நடைபெற்ற ஜஸ்வந்த் மேத்தா எழுதிய "குடியரசுத் தலைவர் முறை சனநாயகம்" (Presidential Democracy) நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில், 1998 - இல் வாஜ்பாயி பிரகடனம் செய்த செய்திகளை பானு தமிஜா குறிப்பிட்டார். 1998 - இல் வாஜ்பாய் குடியரசுத் தலைவர் முறையின் நல்ல கூறுகளை நாம் விவாதிக்க வேண்டும் என்று அறிவித்தார். அவர் "இங்கிலாந்தின் சிறந்த அமைச்சரவை மாதிரி" என்பது இந்தியாவில் உண்மையான இருப்பால் (Indian Reality) தோற்கடிக்கப்பட்டு விட்டது என்று நான் கருதுகிறேன்" என்றார். இதே நோக்கத்துடன், ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி வெங்கடாசலையா தலைமையில் ஓர் ஆணையத்தையும் நியமித்தார்.

தீன்தயாள் உபாத்தியாயா பாஜகவின் கொள்கை முன்னோடி; பாரதீய ஜனசங்கக்காரர்; கோல்வால்கரை வழிகாட்டியாகக் கொண்டவர். இராஷ்டிர தர்மா எனும் மாத இதழை 1940-இல் லக்னோவில் தொடங்கினார். பின்னர் பஞ்சஷன்யா என்னும் வார இதழையும், சுதேசி எனும் நாளிதழையும் தொடங்கினார். அவர் ஆர்.எஸ். எஸ்.இல் பயிற்சி பெற்றவர். அதில் ஒரு முக்கிய பொறுப்பாளர். அவர் இந்திய அரசியல் சட்டத்தை கடுமையாக விமர்சித்திருக்கிறார்; வாழ்நாள் முழுவதும் விமர்சித்தார். 1965இல் இந்திய அரசியல் சட்டத்தை மாற்றி அமைப்பதற்கான திட்டத்தை வகுத்தளித்தார். ஒரு புதிய இந்தியாவுக்கான திட்டம் அது. "தர்மராஜ்யா" எனப்படும் இத்திட்டம் பாஜகவின் இலக்காக ஏற்கப்பட்டது. உபாத்தியாயா வகுத்தளித்த பாதையில் ஒரு புதிய இந்தியாவைத் கட்ட பாஜக விரும்புவதாக இந்துத்துவவாதிகள் பதிவு செய்கின்றனர்.

கே. என்.கோவிந்தாச்சாரியா மற்றொரு ஆர் எஸ் எஸ் இன் கொள்கை வகுப்பாளர்; பாஜகவின் சக்தி வாய்ந்த பொதுச் செயலர்.

தம்முடைய ஒரு நேர்காணலில் "we will rewrite the constitution to reflect Bharathiyata" (பாரதீயதாவை பிரதிபலிக்கும் ஓர் அரசியலமைப்பாக மாற்றி எழுதுவோம்) என்று குறிப்பிட்டார். பாரதீயத்தை பிரதிபலிக்கும் அரசியலமைப்பாக மாற்றி எழுதுவோம் என்று பிரகடனம் செய்தார்.

2017-இல், பாஜக ஒன்றிய அமைச்சர் ஆனந்த் குமார் ஹெக்டே இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்காகவே தாங்கள் இருப்பதாக கூறினார்:

> "இந்திய அரசியல் சட்டம் கூறுகிறபடி பாரதம் ஒரு கூட்டாட்சி; அது மாநிலங்களின் ஒன்றியம்," என்றும், "பீகார் மாதா, பஞ்சாபி மாதா, கன்னட மாதா, தமிழ் மாதா - எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து பாரதமாதா என்று இருப்பது கேலிக்குரியது. நாம் பாரதமாதாவின் உறுப்புகளாகவே மாநிலங்களைக் கருதுகிறோம் ஒவ்வொன்றையும் தனித்தனி தாயாகக் கருதமில்லை. ஆகவே நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சியாக இருக்கக் கூடாது. ஓர் ஒற்றை ஆட்சி அமைப்பாகவே இருக்க வேண்டும்."

1925 முதல், இந்தியாவை ஓர் அகண்ட பாரதமாக, இந்துராஷ்டிரமாக படைத்து விட வேண்டும் என்ற குறிக்கோளோடு ஆர் எஸ் எஸ் தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறது. 1946 முதல் 1949 வரை இந்திய அரசியல் சட்டம் எழுதப்பட்ட காலத்தில், அதை ஓர் இந்துராஷ்டிரமாகப் படைத்து விடுவதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு, அதில் தோற்றது. இந்நிலையில் இந்தியக் குடியரசு உருவாக்கத்திற்குப் பிறகும் தன்னுடைய பணிகளைத் தொடர்கிறது. 1960 - களிலிருந்து குடியரசு தலைவர் முறையை எப்படியாவது கொண்டு வந்துவிட வேண்டும் என்ற கருத்தைத் தீவிரமாகப் பரப்பி வருகிறது. இந்தியாவில் நிலவும் பன்மொழிச் சூழல், பல்வேறு மதங்கள் நிலவும் சூழல், பன்மைப் பண்பாட்டுச் சூழல் - என்ற வேறுபட்ட சூழல்களில், இந்துராஷ்டிரம் படைப்பதற்கும் குடியரசுத் தலைவர் முறைக்கும் அதிக வேறுபாடு இல்லை. ஆளுக்கு ஒரு வாக்கு என்ற வகையில் தேர்தலில் ஒற்றை மனிதனை அனைத்து அதிகாரங்களோடு தேர்ந்தெடுக்கும்போது, அம்மனிதன் தவிர்க்க வியலாதவாறு ஓர் இந்திக்காரனாகவும், இந்து மதத்தவனாகவும் மட்டுமே இருக்க முடியும் என்பதால், குடியரசுத் தலைவர் முறையை இவர்கள் தொடர்ந்து ஆதரிக்கிறார்கள்.

இந்நிலையில் கடந்த 15 அல்லது 20 ஆண்டுகளாக இந்தத் திட்டத்தை ஏற்குமாறு மாநில அளவில் பல்வேறு கட்சிகளைத் தன்வயப்படுத்தி இருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் முறை என்றால் என்ன? நாடாளுமன்ற சனநாயக முறை என்றால் என்ன? என்று அறியாத மக்களிடம் குடியரசுத் தலைவர் முறையைப் பற்றி ஓர் ஆர்வத்தையும், அதை ஆதரிக்கும் உளவியலையும் வளர்த்தெடுக்கும் பொறுப்பை மாநில அளவில் செயல்படும் பல்வேறு கட்சிகளிடம், பல்வேறு மாநிலங்களில் பல்வேறு தலைமைகளிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். "இந்திய குடியரசு தலைவரையே நீ நேரடியாக வாக்களித்து தேர்ந்தெடுத்தால் எப்படி இருக்கும்?" என்று கேட்கும் போது, அப்பாவியான மக்கள் அவ்வளவு அதிகாரத்தை நமக்குத் தருகிறார்களே என்று குதுகலித்துப் போகிறார்கள். இந்த அபாயத்தை மக்கள் இன்னமும் உணரவில்லை. சனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை உள்ள தலைவர்கள் இதை உணர்த்தவும் இல்லை.

**தலைவர்கள் மேடையில் பேசுவதைக் கண்டு புல்லரித்துப் போகாதீர்கள்!**
**அவர்கள் கொள்கை திட்டம் என்னவென்று பாருங்கள்!**

**உதடுகள் தமிழர் உரிமை பேசுகின்றன!**
**ஆனால், திட்டங்கள்இந்துராஷ்டிர உருவாக்கத்திற்கானவை!**

ஆர். எஸ். எஸ். இந்தியாவை இந்துராஷ்டிரமாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை முன்வைத்து செயல்பட்டு வருகிறது. இந்திக்காரர்கள், இந்து மதத்தவர்கள் (பார்ப்பனர்கள்) கையில் ஒட்டுமொத்த அதிகாரமும் வரவேண்டும் என்பதுதான் இந்துத்துவவாதிகளின் ஆசை.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு நேரடியாக பாஜக கட்சியையும், மறைமுகமாக பல்வேறு கட்சிகளையும் இயக்கி வருகிறது.

பா.ஜ.க.வின் தாய் அமைப்புதான். ஆர்.எஸ்.எஸ். இன்னும் 15 ஆண்டுகளில் இந்துராஷ்டிரம் அமைக்கப்படும் என்று ஆர்.எஸ்.எஸ். - இன் தலைவர் மோகன் பகவத் அறிவித்திருக்கிறார். இந்திராஷ்டிர அரசியல் சட்டம் 32 பக்க அளவிற்கு 14.08.2023 அன்று வரைவு செய்து சாமியார்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் நீக்கப்பட்டு இந்து ராஷ்டிர அரசியல் சட்டம் கொண்டுவரப்படும்; முஸ்லிம், கிறிஸ்தவர் இங்கு வாழ முடியாது; வாழ்வதாக இருந்தால் இந்து மதத்திற்குத் திரும்பி சூத்திரர்களாக பஞ்சமர்களாக இருக்க ஒப்புக் கொள்ள வேண்டும் என அறிவித்திருக்கிறார்கள்.

இந்துத்துவ பா.ஜ.க. அதிகாரத்தில் தொடர்ந்தால் இதே அரசியலமைப்புச் சட்டம் தொடரும் என்று கூற முடியாது. தமிழ்நாடு என்ற மாநிலம் இருக்குமா? என்பது சந்தேகம்தான். காஷ்மீருக்கு என்ன நடந்ததோ, மணிப்பூருக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறதோ, அது தமிழ்நாட்டுக்கு நடக்காது என்று எவரும் கூற முடியாது.

இந்நிலையில் ஆர்எஸ்எஸ் அமைப்பு தன்னுடைய மறைமுக கட்சிகள் மூலமாகவும், சுவீகார புத்திர அமைப்புகள் மூலமாகவும், இந்தியாவின் அரசியலமைப்பை மாற்றிவிட்டு "ஒரே நாடு, ஒரே தலைமை, ஒற்றை ஆட்சி" என்பதை நிலை நிறுத்தும் வகையில், இந்திக்காரர்கள் தலைமையையும் இந்துத்துவத்தின் தலைமையையும் நிரந்தரப்படுத்தும் வகையில், "குடியரசுத் தலைவர் முறை"யை ஆதரித்து கருத்து பரவலை மேற்கொண்டு வருகிறது. குடியரசுத் தலைவர் முறையை ஆதரிக்கும் வகையில் மக்களை தயார்படுத்துவதற்கான முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது.

2024 நாடாளுமன்றத் தேர்தலுக்காக பல்வேறு கட்சிகளும் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டன. மேடையில் அவர்கள் தேனொழுகப் பேசுவது, தமிழர் உரிமை பற்றி உணர்ச்சிகரமாக பேசுவது,

வீரவசனங்களை அதிரடியாகப் பேசுவது - என்பதெல்லாம் மேடைகளில் நடந்தது. அதிகம் விபரம் அறியாத இளைஞர்களுக்கு இவையெல்லாம் வாயைப் பிளக்க வைக்கின்றன. ஆனால் மேடைகளில் பேசுவது வேறு; அவர்களின் வேலைத்திட்டம் வேறு. உண்மையில் அவர்களின் வேலை திட்டம் என்ன? என்பது ஆர்ப்பரித்துக் கொண்டிருக்க கூடிய இளைஞர்களுக்குத் தெரியாது.

ஒரு நிகழ்ச்சியைக் கூறுவது பொருத்தமாக இருக்கும். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் நாடறிந்த தமிழறிஞர் ஒருவர் தினமணி இதழில் நடுப்பக்கக் கட்டுரை எழுதி இருந்தார். அதன் கரு இந்தியாவுக்கு "குடியரசு தலைவர் முறை" கொண்டுவரப்பட வேண்டும் என்பது. இதை படித்துவிட்டு பலரும் அதிர்ச்சி அடைந்தார்கள். குடியரசுத் தலைவர் முறை என்றால் என்ன என்று அறிந்தவர்களுக்குதான் அது அதிர்ச்சியாக இருந்தது.

( மொழி வேற்றுமைகள் இல்லாத, பல்வேறு மத வேறுபாடுகள் இல்லாத, கலாச்சார பன்மைத்துவம் இல்லாத நாடுகளில் குடியரசு தலைவர் முறை இருப்பதில் சிக்கல் இல்லை. ஆனால் இந்தியாவுக்கு குடியரசுத் தலைவர் முறை என்பது பல்வேறு தேசிய இனங்களையும், மொழியின அடையாளத்தையும், பல்வேறு மதத்தவர்களையும், மாறுபட்ட பண்பாடுகளையும், ஒடுக்குவதற்கான மோசமான உத்தி. இதைத்தான் ஆர்எஸ்எஸ் காரர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். )

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் பேராசிரியராக வேலை பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய மாணவர் எனக்குத் தொலைபேசியில் அழைத்துப் பேசினார். அந்த மாணவர் "இந்த ஆள் என்ன கிறுக்கனா? குடியரசுத் தலைவர் முறை என்றால் என்னவென்று அவருக்குத் தெரியுமா? அவருக்கு அறிவே கிடையாதா?" என்றெல்லாம் ஆத்திரத்துடன் புலம்பினார். ஏனென்றால், அம்மாணவருக்கு அரசியல் அறிவியல் தெரியும்.

* அரசு முறைகள் பற்றி தேவையான தெளிவு*

சனநாயக அரசுமுறைகளில் (1) பாராளுமன்ற சனநாயகம் (Parliamenary Democracy) (2) குடியரசுத் தலைவர் சனநாயக முறை (Presidential Democracy) என்று இரண்டு உண்டு. பாராளுமன்ற சனநாயக முறை இங்கிலாந்தில் இருந்து நமக்கு கிடைத்தது. பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளில் மொழி பிரச்சனையில்லாத, பல மதங்கள் முரண்படும் பிரச்சனை இல்லாத, தேசிய இனங்களின் பன்மைத்துவம் இல்லாத, பல்வேறு பண்பாட்டுக் கூறுகளில் முரண்பாடு இல்லாத நாடுகளில் குடியரசுத் தலைவர் முறை என்பது இருக்கலாம். அதில் சிக்கல் வருவதில்லை. ஆனால் இந்தியா போன்ற மொழிப் பன்மைத்துவம், பண்பாட்டுப் பன்மைத்துவம், பல்வேறு தேசிய இனங்களின் இருப்பு கொண்ட ஒரு நாட்டிற்குக் குடியரசுத் தலைவர் முறை ஏற்புடையது அல்ல என்பதால்தான் பாராளுமன்ற சனநாயக முறையைத் தெரிவு செய்தார்கள்.

பாராளுமன்ற சனநாயக முறையில் பல்வேறு கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்வு செய்கிறார்கள். இத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் யாரை அல்லது எந்த கட்சியை அதிக உறுப்பினர்கள் ஆதரிக்கிறார்களோ, அவர் அமைச்சரவையை (Cabinet) அமைக்கிறார். பல்வேறு கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் அமைச்சரவை தற்போது அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு மொழியினமும், ஒவ்வொரு மதத்தவரும் தங்கள் குரலை எழுப்பவும், தங்களுடைய தேசிய இன மக்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், ஒரு வாய்ப்பை அளிக்கிறது. நாடாளுமன்ற சனநாயக முறையில் கேபினட் என்று சொல்லக்கூடிய "அரசு" நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டது (answerable to the House). பிரதமருக்கு எவ்வளவு காலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறதோ அதுவரைதான் பிரதமரும் அவருடைய அமைச்சரவையும் பதவியில் இருக்க முடியும்.

ஆனால் குடியரசுத் தலைவர் முறை என்பது அப்படி அல்ல. நாட்டில் உள்ள மக்கள் நேரடியாக அல்லது வாக்காளர் குழுவால் (Electoral College) தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒட்டுமொத்த நிர்வாக அதிகாரங்களையும் கைக்கொண்டு ஆளுகிறார். நாடாளுமன்றத்திற்கும் அவருக்கும் தொடர்பில்லை. நாடாளுமன்றத்திற்கு அவர் பதில் சொல்லக்

கடமைப்பட்டவர் இல்லை. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியில் இருக்கும் நான்கு/ஐந்து ஆண்டுகளுக்கு எந்த முடிசூடாமன்னரை விடவும் அதிகாரம் மிக்கவராக இருப்பார்.

பாராளுமன்ற சனநாயக முறையில், எத்தனையோ மோசமான சட்டங்கள் நாடாளுமன்றத்தில் தடுக்கப்பட்டிருக்கின்றன. பிரதமர் என்பவர் நாடாளுமன்றத்தின் தயவில்தான் பதவி வகிக்கிறார்.

இந்த வாய்ப்புகள் குடியரசுத் தலைவர் முறையில் இருக்காது. நன்கு விவாதித்து, இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்படும் மசோதாக்களை குடியரசுத் தலைவர் என்பவர் "வீட்டோ" (மறுபாணை) அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்த்துக் கட்டுவார்; அல்லது திருப்பி அனுப்பிவிடுவார். இரண்டு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் (2/3) ஆதரவு இருந்தால்தான் அதை மீண்டும் நிறைவேற்றிக் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடியும். மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு என்பது இருப்பதே இல்லை. பெரும்பாலும் குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்பினால் அந்த மசோதா இறந்து போனதாகவே பொருள்.

**இந்தியச் சூழல்**

இந்தியாவில் 2011 - ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில், இந்தி பேசுகிறவர்கள் 57%, பெங்காலி பேசுகிறவர்கள் 8.9%, மராத்தி பேசுகிறவர்கள் 8.2%, தமிழ் பேசுகிறவர்கள் 6.3.

அதுபோன்றே இந்தியாவில் இந்துக்கள் 79.80%, இஸ்லாமியர் 14.23%, கிறித்தவர்கள் 2.3%, சீக்கியர் 1.72%.

இச்சூழ்நிலையில், குடியரசுத் தலைவர் முறையை ஏற்றுக்கொண்டால், இந்தியாவுக்கு ஓர் இந்திக்காரர்தான் குடியரசுத் தலைவராக (நிரந்தரமாகவே) வரமுடியும்; ஓர் இந்து மதத்தவர்தான் நிரந்தரமாக குடியரசுத் தலைவராக வர முடியும். இதையெல்லாம் ஆலோசித்துத்தான் பாராளுமன்ற ஜனநாயக முறையை அரசியல் சான்றோர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

குடியரசுத் தலைவர் முறை என்பதில், மக்கள் நேரடியாக வாக்களித்து ஒரு தலைவரை தேர்ந்தெடுத்து விட்டு, ஐந்து ஆண்டு காலம் காத்திருக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ்-இன் எதிர்பார்ப்பு இதுதான்: குடியரசுத் தலைவரின் ஆணைகள் மூலம் கச்சிதமாக இந்துத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி விட முடியும். அதை தடுத்து நிறுத்தி விட முடியாது. குடியரசுத் தலைவர் மீது குற்றவிசாரணை செய்வது என்பது எப்போதாவது நிகழ்வது உண்டு. அது எளிதானதல்ல.

அதிபர் ஆட்சி முறை என்பதும் குடியரசுத் தலைவர் ஆட்சி முறை என்பதும் ஒன்றுதான். சமீப காலமாகக் குடியரசுத் தலைவர் ஆட்சிமுறை பற்றி அதிகம் பேசப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ்-இன் நேரடி அரசியல் கட்சியான பாஜகவும், பல மாநிலங்களில் மறைமுகமாக ஆர்.எஸ்.எஸ் இயக்கி வரும் கட்சிகளும், குடியரசுத் தலைவர் முறையை ஆதரித்து மக்களிடையே கருத்துப் பரவல் செய்து வருகின்றன. பலருக்கு நாடாளுமன்ற முறைக்கும் குடியரசுத் தலைவர் முறைக்கும் இடையிலான வேறுபாடு என்பது தெரியாததால், பலருக்கு சனநாயக விரோதிகளை அடையாளம் காண முடியவில்லை.

**தமிழ்நாட்டில் வேறு எந்த கட்சியும் ஏற்காத ஆர்.எஸ்.எஸ் - இன் திட்டமான குடியரசுத் தலைவர் அதிபர் முறையை நாம் தமிழர் கட்சி தன் தேர்தல் அறிக்கையில் ஏற்றுப் பேசியிருக்கிறது**

இந்திய ஒன்றியம் என்பது ஒரு குடியரசு நாடு. ஆனால் இந்நாட்டின் முதல் குடிமகனை குடியரசு தலைவரையே குடிமக்களால் நேரடியாகத் தேர்வு செய்ய முடியாத நம் அமைப்பு முறை குடியரசுக் கோட்பாட்டிற்கு நேர் எதிரானதாகும். அனைத்து சட்டங்களும் குடியரசுத் தலைவரின் கையொப்பத்தினாலேயே செயலாக்கம் பெறுகின்றன. மக்களால் தேர்வு செய்யப்படக்கூடிய ஒருவர் மீண்டும் மக்களைச் சந்தித்துத்தான் வெற்றி பெற வேண்டும் என்ற தேவை இருக்கின்ற வரையில்தான் அம்மக்களின் நலனுக்காகச் செயலாற்றுவார். எனவே 'தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்தலின் வழியே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை முடிவாகும்.'

குடியரசுத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதாக இருந்தால், இந்தியாவில் இந்தி பேசுகிற ஒருவர்தான் குடியரசுத் தலைவராக வர முடியும்; இந்து மதத்தைச் சேர்ந்தவர் தான் குடியரசுத் தலைவராக வர முடியும். அவர்களுக்கு வேறு மதத்தவரின், வேறு மொழியினத்தவரின் ஆதரவு தேவையில்லை; எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் இந்திக்காரர்களும் இந்து மதத்தவரும் மட்டுமே போதும்.

இது ஆர்.எஸ்.எஸ். இன் வேலைத்திட்டங்களில் மிக முக்கியமானது. தமிழ்நாட்டில், இந்த சூழ்ச்சிகரத் திட்டத்தைத் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் தங்களுடைய கொள்கை முடிவாக அறிவித்திருக்கும் கட்சி நாம் தமிழர் கட்சி மட்டுமே. இந்த அபாயத்தை உணராதவர்கள்தான் கைத்தட்டுகிறார்கள்;ஆர்ப்பரிக்கிறார்கள்; குதூகலம் அடைகிறார்கள்; தமிழ்நாட்டை, தமிழினத்தை, தமிழ் மொழியைக் காக்க வேண்டும் என்று நினைக்கும் எவரும் குடியரசுத் தலைவர் முறை என்ற திட்டத்தை எவர் கைக் கொண்டாலும் அவர்களைப் புறக்கணிக்க வேண்டும்.

ஆர் எஸ் எஸ் அமைப்பு தலைவர்கள் அறிவாளிகள்தான். பேச்சிலும், எழுத்திலும் வல்லவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு தங்கள் நாசகார திட்டங்களை இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்த முயன்று வருகிறார்கள்.

**காங்கிரசும், திமுகவும் பேசிய மாநில சுயாட்சி!**
**அதையே திரும்பப் பேசுவது தமிழ் தேசியமா?**

2024 நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் முன்வைக்கும் தேர்தல் அறிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. எதிர்காலத்தில் இந்தியா என்னவாக இருக்கும்? மாநிலங்கள் என்னவாக இருக்கப் போகின்றன? - என்பது குறித்த புரிதலைப் பெற இந்திய தேசிய மற்றும் மாநில அளவிலான கட்சிகள் வெளியிட்டிருக்கும் தேர்தல் அறிக்கைகள் ஊன்றி கவனிக்கப்பட வேண்டியவை.

**பாஜக தேர்தல் அறிக்கை - 2024**

பாஜ.க. தன் இந்துராஷ்டிர இலக்கில் குறியாக இருப்பதை வெளிப்படுத்தி இருக்கிறது. ஏப்ரல் 19-ஆம் தேதி நடைபெற இருந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான பாஜக தேர்தல் அறிக்கையை ஏப்ரல் 14-ஆம் தேதி வெளியிட்டார்கள். அதற்கு சங்கல்ப் பத்ரா அல்லது மோடியின் உத்தரவாதம் என்று பெயரிட்டிருந்தார்கள். இதன் சாரம் "ஒரே நாடு, ஒரே தேர்தல்" என்பதுதான். ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதன் உள்ளீடு இந்தியாவுக்கு ஒரே அதிபரைத் தேர்ந்தெடுப்பது, அதாவது குடியரசுத் தலைவர் முறையைக் கொண்டு வருவது என்பதுதான். குடியரசுத் தலைவர் முறையை நீண்ட காலமாக அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். பொது சிவில் சட்டம், ஒரே தேர்தல், முத்ரா கடன் அதிகரிப்பு, ரேசனில் இலவச உணவு தானியம் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிப்பு - என்பவை மட்டுமே அதன் முக்கியக் கூறுகள். இந்திராஷ்டிரம் நோக்கிய பயணத்தை விரைவுபடுத்தும் கூறுகள் இதில் உள்ளன.

**திமுக - வின் தேர்தல் அறிக்கை**

தன் 64 பக்க தேர்தல் அறிக்கையில் மாநிலங்களில் உண்மையான சுயாட்சி பெறுகின்ற வகையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படும்; ஆளுநர்கள் நியமனம் முதலமைச்சர்களின் ஆலோசனையை பெற்று செய்யப்பட வேண்டும்; ஒன்றிய அரசுப் பணிகளுக்கு தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவை தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தப்படும்; ஒன்றிய அலுவலகங்களில் தமிழ் விளங்கும்; அனைத்து மாநில மொழிகளின் வளர்ச்சிக்கு சம அளவு நிதி ஒதுக்கப்படும்; திருக்குறள் தேசிய நூலாக அறிவிக்கப்படும்; தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும்; புதிய கல்விக் கொள்கை இரத்து; மாநில முதலமைச்சர்களைக் கொண்ட மாநில வளர்ச்சி குழு அமைக்கப்படும்; குடியுரிமை திருத்தச் திருத்தச் சட்டம் - 2019 இரத்து செய்யப்படும்; தொகுதி மறு சீரமைப்பில் தமிழ்நாட்டின் முக்கியத்துவம் குறையாமல் பாதுகாக்கப்படும்; பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படாது; ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கைவிடப்படும் - என்பவை முக்கியக் கூறுகள்.

இதில் மாநிலங்களின் உரிமை, தமிழ் மொழிக்கு முன்னுரிமை, ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை நீக்குவது, முதலமைச்சர்கள் ஒன்று கூடி முடிவெடுக்கக்கூடிய மாநில வளர்ச்சி குழு அமைப்பது - என்பவை குறிப்பிடத்தக்கக் கூறுகள். ஆளுநர் பதவியே இருக்கக் கூடாது என்று கூறுவதற்குப் பதிலாக சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்தது போல முதலமைச்சர்களின் ஒப்புதலோடு ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை திமுக தன் தேர்தல் அறிக்கையில் பேசியிருக்கிறது.

திமுக வின் தேர்தல் அறிக்கை மாநில சுயாட்சிக்கு முக்கியத்துவம் தருகிறது. 1974இல் மாநில சுயாட்சித் தீர்மானத்தைத் தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி 50 ஆண்டுகளாக அது கிடப்பில் கிடக்கிறது.

தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் தமிழ்த் தேசிய இறையாண்மை உள்ள குடியரசு அமைத்து விட வேண்டும் என்ற இலக்கை நெஞ்சில் ஏந்தி, அதே நேரம் பாஜகவின் ஒட்டுமொத்த பேரழிவுத் திட்டத்தை வீழ்த்தி

விட வேண்டும் என்ற நோக்கோடு மக்களுக்கு 2024 நாடாளுமன்ற தேர்தலின் போது வழிகாட்டுதல்களை வழங்கினார்கள்.

தமிழ்த் தேசியம் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்தக்கூடிய நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை குழப்பங்களின் தொகுப்பாக விளங்குகிறது.

தமிழ்த் தேசிய ஆதரவு கூறுகளான ஆரிய - பார்ப்பனிய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, பார்ப்பன - பாசிச - கார்ப்பரேட் முதலாளிய கட்டமைப்பின் தகர்ப்பு - ஆகியவை பற்றி எதுவுமே பேசப்படவில்லை. இந்தியப் பாசிசம், பாசிச பார்ப்பனியத்தை வீழ்த்துவது குறித்து ஒரு வரிகூட இல்லை. ஆனால், ஆர்.எஸ்.எஸ் - இன் நூற்றாண்டு கால நோக்கத்தை தன் கொள்கை முழக்கமாக, கொள்கை முடிவாக அறிவித்து இருக்கிறது. பொதுவாக தேர்தல் அறிக்கைகளை நம்மில் பலர் ஊன்றிப் படிப்பதில்லை. உதட்டளவில் பேசப்படுவதைக் கேட்டு, கைதட்டி விட்டு, ஆரவாரித்து விட்டு செல்வதைப் பெரியவர்களும், இளைஞர்களும் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

திமுக மாநில சுயாட்சி பேசுகிறது; நாம் தமிழர் கட்சி ஒருபுறம் குடியரசுத் தலைவர் முறையை ஆதரித்துவிட்டு, மறுபக்கம் மாநில உரிமைகளைப் பேசுகிறது. இதில் வியப்புக்குரியது என்னவெனில், திமுக எந்த மாநில சுயாட்சியைப் பேசுகிறதோ அதே மாநில சுயாட்சி தீர்மானத்தின் சாரத்தைத்தான் நாம் தமிழர் கட்சியும் பேசுகிறது. ஆனால் மாநில சுயாட்சி என்ற சொல்லை மட்டும் பயன்படுத்தவில்லை.

### கூட்டாட்சி பற்றிய குழப்பமான புரிதல்கள்!

மத்திய - மாநில உறவுகள் குறித்து நாம் தமிழர் கட்சியின் அறிக்கை திகைப்பை உருவாக்கும் வகையில் இருக்கிறது. "மாநில கட்சிகள் ஒருங்கிணைந்து ஒன்றியத்திலே ஒரு கூட்டாட்சியை அமைப்பது" என்றும், அது ஒன்றியத்தின் தேசிய இனங்கள் இடையிலான ஒருமைப்பாட்டிற்கும் மாநிலங்களின் நலன்களுக்கும் ஏற்றதாகும் என்றும் அது குறிப்பிடுகிறது. ஒவ்வொரு மாநிலத்தையும் மாநிலக் கட்சிகள் ஆள்வதும், "மாநில கட்சிகளின் பிரதிநிதிகள் கூடிப்பேசி ஒன்றிணைந்து ஆள்வதும்தான் சரியான கூட்டாட்சி" என்றும் கூறுவது அறிவியல் பூர்வமான வரையறை அல்ல. ஒவ்வொரு மாநிலத்திலும் ஏராளமான மாநில கட்சிகள் உண்டு. பல மாநில கட்சிகளின் பிரதிநிதிகள் "கூடிப் பேசி ஒன்றிணைந்து ஆள்வது", என்பது கூட்டாட்சி (Federation) அல்ல.

கூட்டாட்சி முறையானது பொதுவான நன்மையை அடைய விரும்பிய நாடுகள் (states) ஒன்றிணைவதன் மூலம் உருவாக்கப்படுகிறது.

கூட்டாட்சியில், நடுவண் அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சமமான இறையாண்மை உரிமையும் அதிகாரமும் கொண்டவை. நாடுகள் (மாநிலங்கள்) தன்னுரிமை கொண்டவை. மத்திய அரசு அதற்கு ஒதுக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு நிர்வாக எல்லைக்குள் (அதிகாரப் பிரிவுகளில் மட்டும்) இறையாண்மை கொண்டது. ஒரு கூட்டாட்சியில், உறுப்பு வகிக்கும் அனைத்து மாநிலங்களுக்கும் - மைய அரசுக்கும் அதிகாரங்கள் தனித்தனியே வரையறுக்கப்பட்டு, அரசியல் சட்டத்தால் உறுதி செய்யப்படுகிறது.

ஒரு கூட்டாட்சி என்பது எவ்வாறு இருக்கும் என்பதை பற்றி நாம் தமிழர் கட்சி அறிக்கை கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மாநில கட்சிகள் ஒருமித்து ஒன்றியத்திலே ஒரு ஆட்சி அமைப்பது என்றால், அது கூட்டணி ஆட்சியாகத்தான் இருக்குமே ஒழிய கூட்டாட்சியாக இருக்காது.

இந்தியாவிற்கு குடியரசுத் தலைவர் முறைதான்; அதுதான் கட்சியின் கொள்கை முடிவு என்று அறிவித்து விட்ட பிறகு, மத்திய அரசிடம் "நாட்டின் பாதுகாப்பு, பணம் அச்சிடுதல், வெளியுறவுத்துறை" ஆகியவை ஒன்றிய கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும், மீதி அதிகாரங்கள் மாநிலங்களுக்கு என்றும் கூறுவது முரண்பாடுகள் உள்ளதாகும். நாட்டின் பாதுகாப்பு பணம் அச்சிடுதல், வெளியுறவுத்துறை ஆகியவை ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் என்றால், அந்த ஒன்றியம் எப்படிப்பட்டதாக, யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது? என்ற கேள்விகள் எழுகின்றன. ஏன், தமிழ்நாடு தன்னுடைய வெளி உறவுக் கொள்கையை வகுத்துக் கொள்ளக் கூடாதா? இலங்கையுடன் இந்தியாவோ அல்லது பிற இந்திய மாநிலங்களோ நட்புறவு பேணும்போது, தமிழ்நாடு ஈழத்துடன் நட்புறவுப் பேணக் கூடாதா? வெளியுறவுத்துறை என்று மொத்த அதிகாரத்தையும் ஒன்றியத்திடம் கொட்டிக் கொடுத்து விட வேண்டுமா?

ஒட்டுமொத்தமாக இந்தி தேசிய இனத்தின் கையிலும், பார்ப்பன - பனியா கட்டமைப்பின் கையிலும், இந்துக்களின் கையிலும், இந்துக்கள் என்ற பெயரில் இந்துத்துவ சாமியார்களின் கையிலும் அதிகாரங்களை அளித்துவிட்டு, என்ன வகை சனநாயகம் இங்கே இருக்க முடியும்?

### சுழற்சி முறையில் பிரதமர் பதவி !
### தேசிய இனங்களுக்கான காத்திருப்பு விளையாட்டு!

இந்தியாவின் பிரதமர் பதவியில் வட இந்தியர்களே பெரும்பான்மையாக இந்திய தேசிய கட்சிகளால் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும், தமிழ்நாடு, கேரளா, வடகிழக்கு மாநிலங்களுக்கு பிரதமராகும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும், இது இந்திய கூட்டாட்சியில் உள்ள பெரும் குறைபாடு என்றும், ஆகவே "சுழற்சி முறையில் பிரதமர்" தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் நாம் தமிழர் கட்சித் தேர்தல் அறிக்கை கூறுகிறது. 28 மாநிலங்களும் 8 ஒன்றியப் பகுதிகளும் இருக்கக்கூடிய இந்தியாவில் ஒரு பிரதமரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்று வைத்துக் கொண்டால், 180 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஒரு மாநிலத்திற்கு அல்லது யூனியன் பிரதேசத்திற்கு பிரதமரை நியமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டது 200 ஆண்டுகள்தாம். சுழற்சிமுறை பிரதமர் என்ற முறையில் 180 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஒரு மாநிலத்துக்குப் பிரதமர் பதவி என்ற வாய்ப்பு வரும் என்றால், இது எள்ளி நகையாடத் தக்கது; நடைமுறை சாத்தியமில்லாதது என்பது மட்டுமல்ல; நூறாண்டுக் காலத்தில் மாநிலங்களின் அத்தனை உரிமைகளும் களவாடப்பட்டு விடும். மாநிலங்களில் நிலவும் மொழிகள் அழிக்கப்பட்டுவிடும். தேசிய இனத்தாயகங்கள் சிதைக்கப்பட்டு விடும். பல தேசிய இனங்களின் தாயகப் பகுதிகள் கலப்பினங்கள் வாழும் பகுதியாக மாற்றி அமைக்கப்பட்டுவிடும். சுழற்சி முறையில் பிரதமர் என்ற சிந்தனை முதிர்ச்சியான அரசியல் சிந்தனை அல்ல.

### நாம் தமிழர் கட்சி கோரிக்கையின் தந்தை கலைஞர் கருணாநிதி!

"நாட்டின் பாதுகாப்பு, பணம் அச்சிடுதல், வெளியுறவுத்துறை ஆகியவை ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்; மீதி மாநிலங்களுக்கு" என்று நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை கூறுவது நாம் தமிழர் கட்சி முன்வைக்கும் புதிய திட்டமா என்றால் அதுவும் இல்லை.

1974-இல், கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருக்கும்போது சட்டமன்றம் நிறைவேற்றிய மாநில சுயாட்சி தீர்மானம் என்ன கூறுகிறதோ, அதைத்தான் இவர்களும் தங்கள் திட்டமாகக் கூறுகிறார்கள்.

ஒருவர் தமிழ்த் தேசியரா, இல்லையா என்பதை, தன் தேசத்தின் பிரச்சினைகளுக்கு அவர் முன்வைக்கும் தீர்வைப் பொறுத்தே அவரை அடையாளப்படுத்த முடியும். திமுக பேசுவது தமிழ்த் தேசியம் இல்லை என்றால், இவர்கள் பேசுவது மட்டும் எப்படித் தமிழ்த் தேசியம் ஆகும்?

1974-இல் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்படும் நிலையில் சட்டமன்றத்தில் முதலமைச்சர்

### மு. கருணாநிதி ஆற்றிய உரை:

“இந்திய மாநிலங்கள் உள்நாட்டுக் காலனிகளாக இருக்கின்றன” என்று சச்சிதானந்தா சின்கா தன் புத்தகத்தில் குறிப்பிடுகிறார். பத்தாண்டு காலத்தில் 1,700 கோடி ரூபாயை மத்திய அரசிடம் ஒப்படைத்துவிட்டு நாம் வாட்டத்தோடு உட்கார்ந்துகொண்டிருக்கிறோம். இந்த உள்நாட்டுக் காலனி முறை ஒழிக்கப்பட வேண்டாமா? எனவேதான் மாநில சுயாட்சி கேட்கிறோம்!

இப்போது இருக்கிற முறைக்கும், நாம் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் என்ன ஒரே ஒரு சிறிய வேறுபாடு என்றால், இப்போது அதிகாரங்களைக் கொடுத்தால் திரும்ப எடுத்துக்கொள்கிற உரிமை அவர்களுக்கு உண்டு; மாநில சுயாட்சியிலே அது இல்லை. அதிகாரங்கள் கொடுத்துவிட்டால் மறுபடியும் தொட முடியாது. ஆகவேதான், கொடுக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாத மாநில சுயாட்சியை நாம் கோருகின்றோம்.

இது எந்தக் கட்சிக்கும் உரிய தீர்மானம் அல்ல. தமிழகத்திலே இருக்கிற எல்லாக் கட்சிகளுக்கும், இந்தியாவில் இருக்கிற எல்லாக் கட்சிகளுக்கும் உரிய தீர்மானம். இது எங்கள் கட்சிக்கு மட்டுமே உரியது என்று நாங்கள் வாதிட மாட்டோம். இது அனைவருக்கும் பொதுவான தீர்மானம். தமிழ்ச் சமுகத்தைக் காக்க, இந்தியாவிலுள்ள தேசிய இனங்களைக் காக்க, இந்தியாவிலுள்ள மாநிலங்களின் உரிமைகளைக் காக்க, இந்தியாவிலே இருக்கிற மாநிலங்கள் சுயமரியாதையோடு வாழ இந்தத் தீர்மானம் பயன்படும்."

1974 - ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சி தீர்மானம் இவ்வாறு பேசுகிறது:

"நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கு இடையே போக்குவரத்து தொடர்புகள், நாணய செலாவணி ஆகியவை தொடர்பான அதிகாரங்களை மட்டும் கொண்ட

மத்திய அரசும், எஞ்சிய அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் கொண்டுள்ள மாநில அரசுகளும் உள்ள உண்மையான கூட்டாட்சியை நிறுவும் இலட்சியத்துடன் தமிழ்நாடு அரசு அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளிலும், அதிகாரப் பட்டியல்களிலும் செய்யப்பட வேண்டிய திருத்தங்களை வகுத்துத் தொகுத்துள்ளது"

என்று தீர்மானம் பேசுகிறது.

இராணுவம், நாணயம் அச்சடிப்பு, வெளியுறவு, உள்நாட்டுத் தொடர்புகள் என்ற நான்கு தவிர, மற்ற அனைத்தும் மாநில உரிமை என்பதே, திமுகவின் மாநில சுயாட்சி.

2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு நாம் தமிழர் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கை, "நாட்டின் பாதுகாப்பு, பணம் அச்சிடுதல், வெளியுறவுத்துறை ஆகியவை ஒன்றியக் கட்டுப்பாட்டில் இருக்கும்; மீதி மாநிலங்களுக்கு" என்று குறிப்பிடுகிறது.

குறிப்பிட்ட சில அதிகாரங்கள் மட்டும் ஒன்றியக் கட்டுப்பாட்டில், மீதி மாநிலங்களுக்கு என்ற தீர்வைத்தான் 1974இல் கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானமும் குறிப்பிடுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றம் இயற்றிய மாநில சுயாட்சி தீர்மானத்தை 50 ஆண்டுகளாகக் கிடப்பில் வைத்திருக்கிறது இந்திய ஒன்றிய அரசு. திமுக ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மாநில சுயாட்சி தீர்மானம் என்றால், அதையே மற்றொரு கட்சி தன் தேர்தல் அறிக்கையில் திரும்பக் கூறுவது மாநில சுயாட்சி கோரிக்கை அல்லாமல் தமிழ்த் தேசியக் கோரிக்கையாக ஆகிவிடுமா?

2024 - இல் நாம் தமிழர் கட்சி முன் வைக்கும் திட்டத்தின் தந்தையார் கலைஞர் மு கருணாநிதி அவர்கள் தான்.

**ஆங்கிலேயர் காலத்திலும் முன்வைக்கப்பட்ட அதே கோரிக்கை!**

இவற்றுக்கெல்லாம் முதாதையாக ஆங்கிலேய காலனி ஆட்சி காலத்தில் தே கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டன. மத்திய அரசிடம் மூன்று அல்லது நான்கு அதிகாரங்கள் மட்டும் தரப்பட வேண்டும் என்பது ஆங்கிலேயர்களின் காலனி ஆட்சி காலத்திலேயே, காங்கிரஸ் கட்சி மற்றும் பல அறிவாளர்கள் முன்வைத்த ஒன்றுதான்.

1937 - 39 ஆண்டுகளுக்கு இடையே மாகாண சுயாட்சி என்பது நடைமுறையில் இருந்தது. 1935 - ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம், "பட்டியலில் சொல்லப்படாத" அதிகாரங்கள் மத்திய அரசுக்கு என்று வரையறுத்தது. ஆனால் காங்கிரஸ் இது மாநிலங்களுக்கே அளிக்கப்பட வேண்டும் என்று பிரச்சனையை எழுப்பியது.

1940 முதல் பாகிஸ்தான் கோரிக்கை வலுப்பெற்ற நிலையில், அதற்கு மாற்றாக மாகாண சுயாட்சியைக் கொண்டு வந்து பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகளை முன்னெடுத்தனர்.

1943 - இல் பேராசிரியர் கூப்லாண்டு திட்டம் மூன்றடுக்கு அரசாங்கங்கள் அமைப்பு பற்றிக் குறிப்பிட்டது. மையத்தில் ஒரு ஏஜென்சி சென்டர் (முகவர் அமைப்பு) மட்டுமே இருக்கும் என்றும், அந்த மைய அரசுக்கு வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, அந்நிய நாட்டு வணிகம், நாணயம் வெளியிடுதல் ஆகியவை மட்டுமே அதிகாரங்கள் என்றும் அத்திட்டம் குறிப்பிட்டது.

1945 - இல் சட்ட நிபுணர்கள் குழுவான சாப்ரு குழு திட்டம் முன்வைக்கப்பட்டது. வெளியுறவு, பாதுகாப்பு, வணிகம் - சுங்கம், தபால் தந்தி, நாணயம் மற்றும் நெருக்கடி கால அதிகாரங்கள் ஆகியவை மைய அரசுக்கு இருக்கும் என்று கூறியது.

1942ல் கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியாவுக்கு டொமினியன் என்ற தகுதி நிலை அளிக்க வந்தது. அதன்படி ஒவ்வொரு மாகாணமும் தனி அரசியலமைப்புப் சட்டங்களை இயற்றிக்கொள்ளலாம் என்றும், இந்திய யூனியன் என்பது சமமான அதிகாரங்கள் கொண்ட மாகாணங்களாக இருக்கும் என்றும் கூறியது. இந்த அளவிற்காவது அதிகாரங்கள் படைத்த மாநிலங்கள் பற்றி இப்போது எவராவது பேசியதுண்டா?

காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான அபுல் கலாம் ஆசாத் முன்வைத்த ஆசாத் திட்டம் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், போக்குவரவு, இவை தவிர மாகாணங்களே விரும்பித் தரும் அதிகாரங்கள் ஆகியவை மட்டுமே மத்திய அரசிடம் இருக்கும் என்றது.

1946 - இல் காபினட் தூதுக்குழு இந்தியாவிற்கு வந்தது. இது இந்தியாவில் உள்ள மாகாணங்களில் ஏ-பி-சி என்று மூன்று தொகுப்புகளாகப் பிரிக்க வலியுறுத்தியது. இதில், மத்திய அரசிடம் வெளியுறவு, பாதுகாப்பு, செய்தி தொடர்பு ஆகிய மூன்று அதிகாரங்கள் மட்டும் இருக்க வேண்டும் என்று கூறியது. ஆனால் இவையெல்லாம்கூட அப்போது ஏற்கப்படாமல்போயின.

1947 - இல் இஸ்மே பிரபு திட்டம் மாகாணங்கள் கூட்டரசுக் குழுக்களாக உருவாக்கப்பட வேண்டும் என்றும், அவற்றுக்கு சகல அதிகாரங்களும் உரித்தானது என்றும் கூறியது. இஸ்மேபிரபு திட்டப்படி இந்தியத் துணைக் கண்டம் 11 நாடுகளாக அமைக்கப்பட்டிருக்கும். இதைக் கண்டு அலறிய காங்கிரஸ் கட்சி பாகிஸ்தான் பிரிவினைக்கு ஒத்துக்கொண்டது. பாகிஸ்தான் பிரிவினையைக் காங்கிரஸ் ஏற்று பாகிஸ்தான் பிரித்து விடப்பட்ட பிறகு, மீதியுள்ள மாகாணங்கள் அதிகாரம் அற்றவையாகப் படைக்கப்பட்டன.

வரலாற்றில் எதையும் ஊன்றிப் படிக்க விரும்பாத அல்லது படிக்கும் நோக்கம் இல்லாதவர்களுக்கு எல்லாமே புதியதாகத்தான் இருக்கும். முன்பு ஆங்கிலேயக் காலனிய ஆட்சி காலத்தில் பல்வேறு குழுக்கள் பரிந்துரைத்த, அதன் பின்னால் தமிழ்நாடு சட்டமன்றம் மாநில சுயாட்சி தீர்மானம் என்ற பெயரில் இயற்றிய, பலமுறை மென்று துப்பிய அதே விஷயத்தைத் தான் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கையிலும் கூறி இருக்கிறார்கள். இது எப்படி தமிழ்த் தேசிய இலக்காக இருக்க முடியும்? இது தமிழ்த் தேசிய இலக்குக்கானதுதான் என்றால் , 1974 மாநில சுயாட்சி தீர்மானமும், அதற்கு முன்னால் காலனியாதிக்கக் காலத்தில் கேபினட் தூதுக் குழுவும், கிரிப்ஸ் குழுவும், கூப்லாந்து தொடங்கி இஸ்மே பிரபு வரை வழங்கிய திட்டங்கள் தமிழ் தேசியத்திற்கானவையா?

தமிழ் தேசியம் பற்றி பேசக்கூடிய பலர், தமிழ்த் தேசியம் அல்லாதவை தமிழ்த்தேசிய இலக்கு போலக் காட்டப்படுவதைப் பற்றி வாய் திறக்காமல் இருப்பது சரியானதுதானா?

ஒவ்வொரு தேசியஇனமும் தனக்கான இறையாண்மையுள்ள குடியரசைப் படைத்துக் கொள்ள வேண்டும். இந்தியா என்பது இறையாண்மையுள்ள தேசிய இனக் குடியரசுகளின் கூட்டமைப்பாக மாற வேண்டும். இந்தியாவிற்கு என்று மக்களவைத் தேவையில்லை தேசிய இனங்களின் பேரவை மட்டுமே இருக்க வேண்டும், அதில் அனைத்து தேசிய இனங்களுக்கும் சமமான உறுப்பாண்மை அளிக்கப்பட வேண்டும். தேசிய இனங்களுக்கு இடையேயான பிரச்சனைகள், இந்தியாவுக்கான பொதுப்பிரச்சனை ஆகியவை குறித்து இப் பேரவையின் உறுப்பினர்கள் விவாதித்து முடிவெடுக்க வேண்டும். இந்தியாவுக்குப் பொதுவான, மாநிலங்களே விரும்பி அளிக்கும் அதிகாரங்களைக் கொண்ட முகமை அமைப்பு ஒன்றிய அளவில் அமைய வேண்டும். தேசியஇன இறையாண்மை அரசியல் நோக்கி அனைத்து தேசியஇனங்களும் நகர வேண்டும். இந்தப் புரிதலுடன் தமிழ்த் தேசியஇனம் தனக்கான அரசியலை இப்போதே வடிவமைத்துக் கொண்டு பயணிக்க வேண்டும். இந்திய ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டு இணக்க அரசியல் செய்ய விரும்புகின்ற கட்சிகள் தமிழ்த்தேசிய முக்காட்டை நீக்கிக்கொண்டு, ஏனைய கட்சிகளைப் போல பதவி அரசியலில் ஈடுபடுவதை எவரும் எதிர்க்கவில்லை.

●

**இந்தியாவின் ஒற்றுமை தேசிய இனங்களின் உரிமையில்தான் ஏற்படமுடியும்!**

# தமிழர் மட்டும் எதற்குத் திராவிடராக வேண்டும்?

● தோழர் பொழிலன், தமிழக மக்கள் முன்னணி

தெலுங்கர் தெலுங்கராக இருக்கும்போது
கன்னடர் கன்னடராக இருக்கும்போது
மலையாளிகள் மலையாளிகளாக இருக்கும்போது
தமிழர் மட்டும் எதற்குத் திராவிடராக இருக்க வேண்டும்?

- என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர்..

முதலில்.. தமிழ்நாட்டின் தமிழர்கள் யாரும் தங்களைத் திராவிடர்கள் என்று சொல்லிக் கொள்வதில்லை.. பதிவிடுவதும் இல்லை..

தமிழர்கள் திராவிடர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டும் என்று பேசுவதும் இல்லை..

தமிழ்நாட்டைத் திராவிட நாடு என்று சொல்பவர்களும் இல்லை..

தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் உள்ளிட்ட விரிந்த பரப்பு கொண்ட திராவிட நாடு என்ற கருத்து, 1956க்கு முன்பு சென்னைத் தலைமாநிலம் (மெட்ராஸ் பிரசிடென்சி) என்ற பெயரில் இருந்தபோது இருந்தது.

அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் 1956க்கு முன்பு பெரியாரும் திராவிடநாடு கேட்டார்.

1963 வரை திமுக அந்தக் கருத்தைக் கொண்டிருந்தது. அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு என்று கூட முழங்கினார்கள்..

ஆனால் 1963ல், இந்திய அரசு கொண்டு வந்த பிரிவினைத் தடைச் சட்டத்திற்கு அஞ்சிய நிலையில் திராவிட நாடு கேட்பதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன நாங்கள்தாம் கைவிட்டு விட்டோம் எனத் திமுக திராவிட நாடு விடுதலைக் கருத்தை அப்போதே கைவிட்டு விட்டது. இப்போது யாரும் அப்படியான முழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை..

ஆனால் கருத்தளவில் இந்தியாவில் உள்ள அனைவரையும் இந்தியர் - என எண்ண வைத்திருக்கின்றது இந்திய அரசு. திராவிடர் என்பதாகக் கூறி வந்த திமுகவினர்கூடத் தங்களை இந்தியன் என்பதாகக் கூறிக்கொள்கின்றனர்.

மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன் என்பதாகக் குழப்ப அடையாளத்தையே திமுகவினரிடையே கலைஞர் பரப்பினார்..

ஒருவனுக்கு மொழியினமும் தேசிய இனமும்தான் அடையாளம் எனில், இந்தியா என்பது தேசமும் இல்லை இந்தியன் என்பது தேசிய இனமும் இல்லை.

இந்தியா என்பது ஓர் அரசாகவும், அரசு சார்ந்த நாடாகவும் இருக்கிறதே அல்லாமல் இந்தியா என்பது தேசமாகவும், இந்தியன் என்பது தேசிய இனமாகவும் இல்லை, இருக்க இயலாது..

இந்தியாவைத் தேசமாகவும் இந்தியன் என்பதைத் தேசிய இனமாகவும் அடையாளப்படுத்துவது எல்லா நிலைகளிலும் பிழையானது, அடிமை நிலைப்பாடுடையது.

இந்தியக் குடிமகன் என்பது வேறு, இந்தியன் என்பது வேறு. தமிழர்கள், வங்காளிகள், காஷ்மீர், பஞ்சாபிகள் என இந்திய அரசு அதிகாரத்திற்குள் இருக்கிற அனைவரும் இந்தியக் குடிமக்களாக இருக்கலாம். ஆனால் அனைவரையும் இந்தியர்கள் என்று சொல்வது ஒவ்வொருவரின் தேசிய இன அடையாளங்களையும் அழிக்கவே செய்யும்..

இந்நிலையில் இப்போதும் தமிழர்கள் இந்தியர்கள் என்றே பதிவு செய்ய வைக்கப்பட்டுள்ளனர்..

பள்ளிச் சான்றிதழ் முதல் பிறப்புச் சான்றிதழ் தேர்தல் பதிவுகள் என அனைத்திலும் இந்தியர் என்றுதான் பதிய வேண்டியிருக்கிறது..

தமிழர் என்றோ வங்காளிகள் என்றோ பஞ்சாபி என்றோ யாரும் பதிந்து கொள்ள முடியாது..

இந்திய அரசு அப்படியாகப் பதிவு செய்வதை மறுக்கிறது..

இந்தியன் என்று பதிவு செய்யப்படுவதை இழிவாகவோ, தவறாகவோ கருதி அதை எதிர்த்து எந்த அரசியல் கட்சிகளும் பேசுவதும் இல்லை.. போராடுவதும் இல்லை..

இந்திய அரசியல் சட்டப்படி இந்தியக் குடிமகன் என்றுகூடப் பதிவு செய்யட்டும்.. ஆனால் அதற்காகத் தமிழர்களோ பிறரோ இந்தியர்கள் ஆகிவிட முடியாது..

தமிழர்களை இந்தியர்கள் என்று பதிவு செய்யக்கூடாது என்று பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தென்மொழித் தொடர்பினரும் தோழர் தமிழரசன் அரசியலை ஏற்றுச் செயல்படுவோர்கள் மட்டுமே போராடி வருகின்றோம்..

நாம் தமிழர்கள் என்று கை உயர்த்திக் கொள்பவர்கள் கூட அதை எதிர்த்து வாய் திறப்பதோ போராடுவதோ இல்லை..

இந்நிலை ஒருபுறம் இருக்க,

பள்ளி, கல்லூரி, பிறப்புச் சான்றிதழ்களில் பிற ஆவணங்களில் இந்தியன் என்று பதிந்து கொண்டிருப்பது போல் திராவிடன் என்று எங்காவது பதிகிறார்களா?

நாங்கள் எல்லாம் இந்தியாவைச் சார்ந்தவர்கள் என்றோ, வெளிநாடுகளுக்குச் செல்கிற ஒருவர் நாங்கள் இந்தியாவிலிருந்து வருகிறோம் என்றோ சொல்லிக் கொள்வது போல், நாங்கள் எல்லாம் திராவிட நாட்டைச் சார்ந்தவர்கள் என்றோ, திராவிடநாட்டிலிருந்து வருகிறோம் என்றோ எவரும் சொல்லிக் கொள்வது இல்லை..

சில பொழுதுகளில் தமிழ்த் தேச உணர்வுள்ள சிலர் வெளிநாடுகளில் தமிழ்நாட்டில் இருந்து வருகிறோம்; அது இந்தியாவின் தென்கோடியில் உள்ளது என்ற அளவில் சொல்வதுண்டு.

அது உண்மையும் கூட. ஆனால் எவரும் நாங்கள் திராவிட நாட்டிலிருந்து வருகிறோம் என இல்லாத ஒன்றைச் சொல்வதில்லை. தமிழர், தமிழ்நாடு என இருப்பதையே சொல்ல மறுக்கிற எவரும் இல்லாததைச் சொல்வதேயில்லை.

ஆனால், திராவிடம் என்கிற கருத்து ஒன்று நிலவி வருகிறது..

அது எவ்வாறு நிலை வருகிறது? யாரிடம் நிலை வருகிறது? ஏன் நிலவி வருகிறது? என்பது மிகவும் முதன்மையானது.

ஆரியம் என்பது அதிகார கருத்தாக மாறிய பொழுது, திராவிடம் என்பது ஆரியம் அல்லாத அடையாளக் கருத்தாகவும், ஆரிய அதிகாரத்தை எதிர்த்த கருத்தாகவும் நிலவத் தொடங்கியது.

ஆரியர்களே உயர்ந்தவர்கள், ஆரிய மொழியே சமஸ்கிருதம், ஆரிய வர்த்தம் என்பதே ஆரியக் கருத்தாடல்கள் அதிகாரம் செலுத்தும் பகுதி, ஆரிய நாடு என்பதே ஆரிய அதிகார அரசுக்குரிய நாடு என்பதெல்லாம் வரலாறு நெடுக பார்ப்பனிய அதிகார வகுப்பின் வரலாறாக இருந்து வருகிறது..

வேத புராண சாஸ்திரங்கள் என்னும் ஆரியப் புனைவு இலக்கியங்கள் தொடங்கி அதைச் சார்ந்து எழுதிய பாரதி வரை அதைக் கடந்து இன்று வரை உள்ள கருத்தாளர்கள் அனைவரும் ஆரியம், ஆரிய மொழி, ஆரிய வர்த்தம், ஆரிய நாடு எனப் பெருமை பேசுகிறவர்களே..

"பேரிமய வெற்பு முதல் பெண்குமரி ஈறாகும்
ஆரிய நாடு என்று அறி"

"உன்னத ஆரிய நாடு எங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கில்லை ஈடே"

"ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக"

- என்றெல்லாம் எண்ணற்ற இடங்களில் இதை ஆரிய நாடு என்று பெருமைபட்டுக் கொள்ளவார் பாரதியார்..

அதேபோல் ஆரியரை உயர்த்தி நிறுத்துவதோடு பிறரையெல்லாம் இழிவு செய்து கீழ்நிலைப்படுத்தி இழித்துரைப்பார்..

"வீரிய மொழிந்து மேன்மையும் ஒழிந்து, நம்
ஆரியர் புலையருக்கு அடிமைகள் ஆயினர்"

"தீய புலைருக்கும் விடுதலை"

"ஆரியத் தன்மை அற்றிடும் சிறியர்
யாரிவண் உளர்? அவர் யாண்டேனும் ஒழிக!"

புலையரை இழித்தும், ஆரியரல்லாதவரை, ஆரியத் தன்மை இல்லாதவரை ஒழிக எனும் கருத்தைப் பாரதி கொண்டிருந்ததைக் கவனிக்க வேண்டும்.

ஏதோ அன்றைய பாரதி மட்டுமில்லை இன்றைக்கும் ஆரியப் பார்ப்பனிய கருத்தாடல் கொண்ட அனைவருமே வேதங்களையும் புராணங்களையும் ஆரியத்தையும் உயர்த்திக் கொண்டாடி வருகின்றனர்..

ஒரு கிழமைக்கு இரண்டு முறையிலாவது ஆரியப் பார்ப்பனிய கருத்தாடல்களை உச்சி முகர்ந்து கொள்கின்றன ஊடகங்கள் அனைத்தும்..

தினமணி, தினமலர், தமிழ் இந்து என்கிற பார்ப்பனர்களின் செய்தி ஊடகங்களில் மட்டுமன்றி.. தினத்தந்தி, சன் தொலைக்காட்சி உள்ளிட்ட பார்ப்பனரல்லாத பார்ப்பனியச் சார்புடைய இதழ்களில், காட்சி ஊடகங்களில் எல்லாம் வேத புராண குப்பைக் கூலங்களே ஏற்றிப் போற்றப்படுகின்றன.. ஆரியம் தலை விரித்தாடுகிறது..

அந்நிலையில் அதிகார வெறி கொண்ட ஆரிய பார்ப்பனியத்தை எதிர்த்து அனைவரையும் சமம் என்னும் நோக்கம் கொண்டதாகவே எழுந்து செயலாற்றியது தமிழ் அறம்..

தமிழ் அற உணர்வு கொண்ட பழந்தமிழ்ப் பேரினம் விரவி இருந்த பகுதிகளுக்குள் எல்லாம் ஊடுருவித் தமிழியத்தைக் கூறு பிரிக்கவும் சிதைக்கவும் செய்தது ஆரியம்.

சமஸ்கிருதத்தைக் கலந்து தமிழியத்தை சிதைத்தது..

சாதி கலப்பால் பிறந்த குழந்தையை எப்படி ஒரு குறிப்பிட்ட சாதியின் குழந்தை என்று சொல்ல இயலாதோ.. அப்படித் தமிழிலிருந்து சமசுக்கிருதக் கலப்பால் உருக்கொண்ட மொழிகளைத் தமிழ் என்று சொல்ல இயலாமல்தான், மொழிப் பெயர் தேயங்கள் தமிழியத் தொடர்பு மொழிகள் உருக்கொண்டன..

அவற்றை ஆரியம் தனக்குச் சார்பானவாக அரவணைத்ததுடன், தமிழ் மூலத்திலிருந்து பிறந்த அவற்றையெல்லாம் தமிழுக்குப் பகையாக ஆக்குவதிலேயே ஆரியம் கவனம் செலுத்தியது.. செலுத்துகிறது.. தூண்டி வருகிறது..

ஆனால், தமிழ் மூலத்திலிருந்து திரிந்த அவற்றைத் தமிழியத் திரிபு மொழிகள், திரமிள - திராவிட மொழிகள் எனச் சொல்லிக் கொள்வதில்கூட தமிழர்கள் சிலர் மறுக்கின்றனர்.

தமிழ் மூலத்தினின்று தோன்றியவையே அவையெல்லாம் என்ற கருத்தை வலிமைப்படுத்தி உலகறிய தமிழர்கள் செய்யாத நிலையில்தான் கால்டுவெல், பர்ரோ போன்ற அயல் நில அறிஞர்கள், தலைவர்கள் அவற்றை உலகறியச் செய்தனர்.

தமிழே திராவிடத்திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமும் என்று அதன் மொழி, இனச் சிறப்பை உலகறிய முழங்கினார் பாவாணர். தமிழர்களின் குமுகவியல், அரசியல் வாழ்வியல் சிறப்புகளைத் தமிழ் உலகம் எங்கும் பரப்பினார் பாவலரேறு.

ஆனால், தொடக்கத்தில் ஆரியத்தை எதிர்த்த திமுக, பினனர் ஆரியத்தை வலுவாக எதிர்க்கும் திறனிழந்து போனது.

ஆனால் ஆரியத்தை எதிர்த்துக் கருத்தளவில் உருக்கொண்டதே திராவிடம்.

ஆரியத்தை எதிர்த்த தமிழியத் தொடர்புடைய இனமக்களையெல்லாம் இணைத்த பொதுச் சொல்லாகவே திராவிடம் அயாத்திதாசர் காலத்திற்கு முன்பிருந்தே உணரப்பட்டது.. பரப்பப்பட்டது..

திராவிடம் என்பதைத் திராவிட நாடாக அடையாளப்படுத்தி முனைந்த முனைப்பு ஆங்கிலேயரால் இந்தியா என வலிய உருவாக்கப்பட்ட அக்காலத்தின் இயங்கியல் போக்கில் நடந்த முயற்சி.

அந்த நாட்டின் முயற்சியில் ஏற்பட்ட பிழை பல்வேறு கோணங்களில் உணரப்பட்டு 1956 இல் பெரியார் தொடங்கிப் படிப்படியாக அனைவராலும் கைவிடப்பட்டது.

1956 க்குப் பின்னர் தமிழ்நாடு தமிழருக்கே என்பதே வலுப்படத் தொடங்கியது.

திராவிடம் என்பதை ஆரியத் தொடர்பற்ற தமிழிய மொழிகளின் அடையாளச் சொல் என்பதாகவும், ஆரிய எதிர்ப்புக்கான தமிழிய தொடர்புடைய இனங்களின் ஒருங்கிணைப்புச் சொல் என்ற அளவிலும் விளங்கிக் கொள்ளாமல் தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள இணைப்புச் சொல்லாக மட்டுமே புரிந்து கொள்ளும் நடைமுறையை திமுகவே வளர்த்தது..

திமுக தோற்றம் கொண்டு தேர்தலில் ஈடுபடத் தொடகிய பின்னர் அதன் தேர்தல் வாக்குத் தேவைக்காகத் தமிழ்நாட்டில் உள்ள தெலுங்கு, கன்னட , மலையாளத் தாய் மொழியினரின் வாக்குகளை ஈர்ப்பதற்காகவே திராவிடம் என்பதன் பொருளின் உள்ளடக்கத்தை மாற்றியது திமுக.

எனவே, திராவிடம் என்பதற்குரிய உள்ளீடான ஆரிய மறுப்பு, ஆரிய எதிர்ப்பு என்கிற கருத்தாடல்கள் வலுவிழந்து போயின.

பெரியார் மறைவுக்குப் பின்னர், தமிழ்நாடு தமிழருக்கே முன்னெடுப்பதைத் திராவிடர் கழகம் கைவிட்ட பின்னர், விடுதலை அலுவலகப் பெயர்ப் பலகையில் உள்ள தமிழ்நாடு தமிழருக்கே முழக்கத்தை அழித்துவிட்ட பின்னர்.. படிப்படியாக ஆரியப் பார்ப்பன எதிர்ப்பு, இந்தியப் பார்ப்பனிய அரசக் கட்டமைப்பு எதிர்ப்புகளைத் திராவிடம் என்கிற பெயரின் உள்ளீட்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டது திராவிடர் கழகம்..

அதனால் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறிய ஐயா ஆனைமுத்து, மயிலாடுதுறை இராமதாசு, தஞ்சை இரத்தினகிரி, பேரா.வீரபாண்டியன், பேரா. நெடுஞ்செழியன், கோவை இராமகிருட்டிணன், கொளத்தூர் மணி உள்ளிட்ட பலரும் பல நிலைகளில் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பை வலுப்படுத்திட இயக்கங்களை உருவாக்கினர்.

எனவே, திராவிடம் எனும் சொல்லுக்கு ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு, இந்திய அரசக் கட்டமைப்பின் மறுப்பு என்கிற பொருள் உள்ளீடு இன்னமும் இயக்கங்களிடையே உயிர்ப்பித்துக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டு அளவில் தமிழ்த்தேசிய எழுச்சிக்கு, தமிழ்த் தேசிய விடுதலை உணர்வுக்குத் தமிழ்த்தேசம், தமிழ்நாடு, தமிழர் என்னும் அடையாளப்படுத்தங்களே சரியானவை.., போதுமானவை என்ற போதிலும், இத்தகைய நோக்கிலேயே இந்தியாவிலுள்ள பிற தேசிய இனங்களிடையே எதிர்ப்புணர்வை இந்திய பார்ப்பனிய அதிகாரப் போக்கு எதிர்ப்பை உணர்த்துவதற்கு, விளங்க வைப்பதற்குத் திராவிடம் எனும் சொல்லும் தேவைக்குரியதாக உள்ளது.

உலக அளவில் சில நூற்றாண்டுகளாகத் தமிழ் அறிஞர்களாலும், அண்டை மொழித் தேச அறிஞர்களாலும், எண்ணற்ற வெளிநாட்டு அறிஞர்களாலும் அக்கருத்து உலக அறிவுத்தளத்தில் ஆரிய மறுப்பு சொல்லாகப் பதியப்பட்டுள்ளது. உலக அகராதிகள் அனைத்திலும் திராவிடம் என்பதற்குச் சமசுக்கிருதம் அல்லாத என்கிற விளக்கங்களே பதியப்பட்டுள்ளன..

இந்நிலையில் இச்சொல்லின் உள்ளீடை இழக்கும் வகையிலும் பிற தேசங்களுக்கும் உலக அளவிலும் விளக்கப்படுத்துவதற்கும் இயல்பாகப் பரவி இருக்கிற அச்சொல்லை மறுக்க வேண்டும் என்பது தேவையற்றது.

அவ்வகையில் அச்சொல்லை கையாள்வது தேவையானதாகவும் உள்ளது.

இன்றைக்கு உள்ள இந்திய பாசிச ஒற்றை அதிகார அரசு அமைப்பு என்பது வல்லரசியத்தால் மட்டுமின்றி ஆரிய பார்ப்பனியத்தாலும் கட்டமைக்கப்பட்டு அதிகார அளவில் வலுப்படுத்தப்பட்டு இருக்கிறது.

இந்திய எதிர்ப்பு என்பதை ஏதோ பாஜக என்கிற கட்சி எதிர்ப்பாக, காங்கிரஸ் கட்சி என்கிற கட்சி எதிர்ப்பாகப் புரிந்து கொள்ளாமல் இந்திய ஒற்றை பாசிச அரசு உருவாக்க அமைப்பையே எதிர்ப்பது என்று புரிந்து கொள்ள வேண்டும். இந்திய எதிர்ப்பு என்பது ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு என்பதாகவும், கார்ப்பரேட் வல்லதிகார எதிர்ப்பு என்பதாகவும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வகையிலான இந்திய எதிர்ப்பைத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமே செய்ய இயலாது. இந்தியாவில் உள்ள பிற தேசிய இனங்களின் ஒற்றுமையை வலுப்படுத்தியே செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வகையிலான தேசிய இனங்களின் ஒற்றுமை கொண்ட புதிய ஒன்றியத்தை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இந்தியாவில் உள்ள பிற தேசிய இனங்களுக்குக் கார்ப்பரேட் முதலாளிய எதிர்ப்பு அரசியல் புரிதலை உருவாக்குவது போல, ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு அரசியலையும் விளங்க வைக்க வேண்டியுள்ளது.

ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பை, சமசுக்கிருத அதிகார எதிர்ப்பை, வேதபுராணம் ஆரிய கருத்துருவாக்க எதிர்ப்புகளை, ஆர்எஸ்எஸ் உள்ளிட்ட சங் பரிகாரங்கள் எதிர்ப்பை சரியாக விளங்க வைக்க வேண்டிய தேவை ஆரியத்திற்கு நேரெதிரான தமிழியத்திற்கே உள்ளது.

அத்தகைய அரசியல் விளக்கப்படுத்தங்களுக்கு ஆரிய மறுப்பை, எதிர்ப்பை அடையாளப்படுத்தி உருக்கொண்ட திராவிடம் எனும் சொல்லும் தேவைக்குரியதாகின்றது.

ஆரியம் என்னும் அதிகார வெறி அடையாளங்கள் இருக்கின்றவரை திராவிடம் எனும் ஒருங்கிணைப்பு உரிமைச் சொல் புழக்கத்தில் இருக்கவே செய்யும்.

திராவிடம் என்பது எந்தத் தனி ஒரு தேசிய இன மக்களையும் குறிக்கும் சொல் இல்லை.. எனவே தமிழர்களைத் தமிழர்கள் என்று சொல்லாமல் திராவிடர்கள் என்று சொல்ல வேண்டிய தேவையில்லை.. அதுபோல் தெலுங்கர்களையோ, கன்னடர்களையோ பிற தமிழியத் தொடர்புடைய எந்த ஒரு தனி இனத்தையோ திராவிடர் என்று சொல்லவேண்டிய தேவையில்லை.

ஆதலால் ஆரியம் அல்லாத தமிழிய மூலத்திலிருந்து விரிந்து பெருகிய தமிழினத் தொடர்புடைய மக்களையெல்லாம் இணைத்து அடையாளப்படுத்துகிற பொதுச்சொல் என்கிற அளவில் விளங்கிக் கொள்ளவும் கையாளவுமே வேண்டியுள்ளது.

●

# காங்கிரசை மாநில உரிமை பேச வைத்த இந்தியா கூட்டணி.

● தோழர் க. இரா. தமிழரசன்
தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்

பாஜக ஆட்சிக்கு வந்த 10 ஆண்டுகளில் இந்திய நாட்டின் ஜனநாயகத்தின் மீதும், புரட்சியாளர் அம்பேத்கர் எழுதிய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து மத்திய அரசின் கீழ் அனைத்து அதிகாரங்களையும் குவித்து வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநரைக் கைப்பாவையாக வைத்துக் கொண்டு தமிழ்நாடு மட்டுமின்றி மேற்கு வங்கம், மகாராட்டிரா, ஆந்திரா, தெலங்கானா, டில்லி, புதுச்சேரி மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கு நெருக்கடி கொடுக்கிறது.

இந்தியாவின் பல்வேறு மொழி, இன, கலாச்சார, பண்பாட்டு அடையாளங்களை அழித்து விட்டு ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே சட்டம், ஒரே மதம், ஒரே தேர்தல் என ஒற்றைப் பாசிச சர்வாதிகார பாரத நாட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இராமர் கோவில் திறப்பு, பொது சிவில் சட்டம், குடியுரிமைத் திருத்தச் சட்டம் என ஜனநாயக இந்தியாவைத் தீவிர இந்துத்துவ நாடாக மாற்றுவதற்கான திட்டத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தலைப் பா.ஜ.க சந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆர் எஸ்.எஸ். இன் நூறாண்டுக் கால கனவை நிறைவேற்ற மோடி, அமித்சா உள்ளிட்ட அடியாட்களை தேர்தல் களத்தில் இறக்கிவிட்டுள்ளது. இப்படியான வேளையில் காந்தி குடும்பத்திற்கு அப்பாற்பட்டு சமூக நீதி அடிப்படையில் காங்கிரசு கட்சிக்கு தலைவர் நியமித்து இந்தத் தேர்தலைக் காங்கிரசு சந்திக்கிறது. இந்துத்துவம் எதிர் சனநாயகம் என்ற அடிப்படையில் இந்தத் தேர்தல் புதிய களமாக அமைந்துள்ளது. இப்படியான வேளையில் காங்கிரசின் தேர்தல் அறிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி இந்தியா கூட்டாட்சி (Federalism) நாடாகும். பல மாநிலங்களின் ஒன்றியம் (Union of states) தான் இந்தியா. ஆனால், அதற்கு மாறாக இந்தியாவை ஒற்றை நாடாக பா.ஜ.க மாற்றிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்பேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்திய அரசை ‘ஒன்றிய அரசு’ என அழைத்ததற்காக பாஜக தலைவர்கள் எப்படி கண்டனக் குரல் எழுப்பினார்கள் என்பதை நாம் அறிவோம்.

சட்டப்படி பொருந்தக்கூடிய ஒன்றியம் என்ற சொல்லைக் கூட பாஜக அரசு சொல்ல மறுத்த நிலையில் இந்தியா என்பது யூனியன் ஆப் ஸ்டேட்ஸ் என்று குறிப்பிட்டு இதுதான் இந்தியக் கூட்டாட்சியின் தத்துவம் என்று காங்கிரசு தனது தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேசியக் கல்விக் கொள்கை மாநில அரசுகளின் ஆலோசனைகளுக்குப் பிறகே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் நீட், கியூட் போன்ற தேர்வுகளை மாநில அரசுகள் விருப்பப்பட்டால் நடத்திக் கொள்ளலாம் என்றும் மாநில அரசுகள் தங்கள் விருப்பப்படி மாணவர்கள் சேர்க்கையை நடத்தலாம் என்றும் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு எதிரானதாகவும் கூட்டாட்சி தத்துவத்தைச் சிதைக்கும் நோக்கிலும் , மாநிலக் கட்சிகளை இல்லாமல் ஒழிக்கும் திட்டத்தில் பா.ஜ.க.வால் முன்மொழியப்பட்ட, ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை கொண்டுவரப்படாது என்றும் காங்கிரசு தெரிவித்துள்ளது.

அரசியல் சாசனம் 8வது அட்டவணையில் ஏராளமான மாநில மொழிகள் சேர்க்கப்படும் என்றும் வரி வசூலில் மாநிலங்களை ஏமாற்றும் பாஜகவின் சட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் மாநிலங்களுக்கு அதன் உரிமைத்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

நாட்டின் எல்லை, பாதுகாப்பு, ராணுவம், நிதி, வெளியுறவு, அணுசக்தி, வான், கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட 100 துறைகள் மத்திய அரசிடம் உள்ளன. இத்துறைகளில் மத்திய அரசு மட்டுமே முடிவுகள் எடுக்க முடியும். அதற்குத் தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்ள முடியும்.

காவல், சட்டம் ஒழுங்கு, பொது சுகாதாரம், உள்ளாட்சி, சிறைத்துறை, பொது வழிபாடு, மது விற்பனை உள்ளிட்ட 61 துறைகள் மாநில அரசுப் பட்டியலில் உள்ளன. இத்துறைகளில் மாநில அரசுகள் தனித்து முடிவுகள் எடுக்கலாம். தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம். அதே நேரம் எப்போது நினைத்தாலும் மாநில அரசின் பட்டியலில் உள்ள எந்தவொரு துறையையும் மத்திய அரசு கையில் எடுத்துக் கொள்ளலாம். அதற்கு உதாரணம், நெருக்கடி நிலை காலத்தில் இந்திரா காந்தி (1976 இல்) கல்வி, நீதி, நிர்வாகம் உள்ளிட்ட 5 துறைகள் மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்குக் கொண்டு சென்றார்.

மின்சாரம், தொழில் உள்ளிட்ட 52 துறைகள் பொதுப்பட்டியலில் உள்ளன. இத்துறைகள் குறித்து மாநில அரசுகளும் முடிவு எடுக்க உரிமை உண்டு. ஆனால், இதில் மத்திய அரசு தலையிடும் போது மாநில அரசால் ஒன்றும் செய்ய முடியாது. இப்படியான நிலையில்,

பொதுப்பட்டியலில் உள்ள பலதுறைகளை மாநில பட்டியலுக்கு மாற்றுவது குறித்து ஆய்வு செய்யப்படும் என காங்கிரசு அறிவித்துள்ளது.

பா.ஜ.க காசுமீரின் சிறப்பு அதிகாரத்தைப் பறித்து காசுமீரைச் சிதைத்தது. அதற்கு மாற்றாக ஜம்மு-காசுமீருக்கு முழு மாநில அந்தஸ்து உடனடியாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது. இப்படியாக காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கையில் மாநில உரிமைகள் குறித்துக் கவனம் செலுத்தியுள்ளது. ஒருவேளை இந்தியா கூட்டணி வெற்றி பெற்று காங்கிரஸ் ஆட்சி அமைத்தால் மேற்கண்டவைகளை நடைமுறைப்படுத்துமா என்றால் அது நம் கையில்தான் உள்ளது.

காங்கிரஸ் கட்சி மட்டும் தனித்து இருந்திருந்தால் இப்படியாக தனது தேர்தல் அறிக்கையைத் தயாரித்திருக்காது. மாநில உரிமைகள் பேசும் கட்சிகள் இணைந்து இந்தியா கூட்டணியில் இருப்பதால்தான் இந்த மாற்றத்தை காங்கிரஸ் கொண்டு வந்துள்ளது. ஏனெனில் காங்கிரசும் மாநில உரிமைகளைப் பறித்த கட்சிதான்.

1942 இல் புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் செயற் குழு மாநிலங்களுக்குப் பிரிந்து வாழும் உரிமை உண்டென்று உறுதிகூறி

“ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக, இந்திய யூனியனுள் இருக்கும்படிக் கட்டாயப்படுத்த காங்கிரஸ் விரும்பவில்லை...” என்று தீர்மானம் நிறைவேற்றியது.

பாகிஸ்தான் பிரிவினையை ஏற்கும் தீர்மானத்தை முன்மொழிந்து டில்லி நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு பேசியபோது,

"விரும்பாத மாநிலம் அல்லது மாநிலங்களுக்கு இந்திய சமஷ்டியிலிருந்து பிரிந்து வாழும் உரிமை உண்டென்று காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படித்தான் இப்போது - பாகிஸ்தானிலுள்ள மாநிலங்கள் பிரிந்து செல்ல அனுமதிக்கப் பட்டிருக்கின்றன." என்று கூறினார். பின்னாட்களில் காங்கிரசும் சரி, காங்கிரசு தலைவர்களும் மிகக் கொடுமையாகத் தேசிய இனங்களை ஒடுக்கினர். மொழி வழி மாநிலங்கள் அமைவதைக் கூட தடுத்து வன்முறைத் தாண்டவமாடினர். தற்போது உள்ள பா.ஜ.க.வுக்கு மாநில உரிமைகளை ஒடுக்குவதில் முன்னோடி காங்கிரசு தான் என்றால் மிகையாகாது.

1963-இல் பிரிவினைத் தடைச் சட்டத்தை இந்திய அரசு கொண்டு வந்து மொழிவழித் தேசிய இன கோரிக்கை முற்றிலும் ஒடுக்கப்பட்டது. இதன் பின்னனியில் திராவிட நாடு விடுதலைக் கோரிக்கையை அறிஞர் அண்ணா கைவிட்டு விட்டு, விடுதலைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன; நாங்கள்தாம் கைவிட்டு விட்டோம் என்றார்.

" சுதந்திரத்திற்குப் பிறகு மத்திய, மாநில அரசுகளின் உறவு தற்போது மிகவும் மோசமாகியுள்ளது என்று தெரிவித்துள்ளதை எளிதில் கடந்து போக முடியாது. எனவே, வெளியுறவு, பணம் அச்சடிப்பு, எல்லைப் பாதுகாப்பு, இராணுவம், தொலைத் தொடர்பு உள்ளிட்ட துறைகளை மத்திய அரசும் கல்வி, மருத்துவம், வேளாண்மை, காவல், வருவாய் ஈட்டல் உள்ளிட்ட துறைகள் முழுமையாக மாநில அரசின் தன்னாட்சி அதிகாரமாக இருக்க வேண்டும் என்றும் மாநில சுயாட்சி முழக்கத்தை அறிஞர் அண்ணா வலியுறுத்தினார்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மாநில சுயாட்சி கோரிக்கைகள் பரவத் தொடங்கின. மாநிலக் கட்சிகள் வலுவாக உள்ள மாநிலங்களில் எல்லாம் மாநில சுயாட்சிக் கொள்கை முன்னெடுக்கப்பட்டது. ஜோதிபாசு, என்.டி.ராமராவ், ராமகிருஷ்ண ஹெக்டே எனப் பல முதல்வர்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கையை முன்வைத்தார்கள். அறிஞர் அண்ணா கூறியதைத் திராவிட இயக்கங்கள் இன்றும் தொடர்கின்றன.

மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு தனது கூட்டணியில் இல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்குப் பாரபட்சம் காட்டுகிறது, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை,சிபிஐ ஆகியவற்றை மத்திய அரசுகள் தவறாகப் பயன்படுத்துவதாகத் தொடர்ந்து குற்றச்சாட்டு எழுந்து கொண்டிருக்கிறது. அதிக வரி வருவாயை மத்திய அரசுக்கு கொடுத்தாலும், தமிழ்நாடு உள்ளிட்ட பா.ஜ.க அல்லாத மாநிலங்களுக்கு மிகக் குறைவாகத் திரும்ப கிடைக்கிறது. அங்குள்ள மாநில உரிமைகள் பறிக்கப்படுகிறது என்பதையும் எல்லா மாநிலங்களும் உணர்ந்து கொண்டன. இந்த நெருக்கடியைக் காங்கிரசும் எதிர்கொண்டுள்ளது. இதன் விளைவாகத்தான்

இந்திய நாடாளுமன்றத்தின் தற்போதைய தேர்தலில் மாநில சுயாட்சி உரிமை பேசு பொருளாக இருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு அதிகாரத்தில் இருந்தாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் அந்த அரசு செயல்பட முடியும். குறிப்பாக முதலமைச்சர் இருக்க, மத்திய அரசால் நியமிக்கப்படும் ஆளுநர் ஒப்புதலின்றி எதுவும் இங்கு நடைமுறைப்படுத்த முடியாது.

இதன் விளைவாகத்தான் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, கேரள முதல்வர் பினராயி விஜயன், ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், டெல்லி முதல்வர் கெஜ்ரிவால், தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் போன்றோரும் ‘கூட்டாட்சி’ பற்றி குரலை எழுப்பிவருகின்றனர். மீண்டும் பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் காங்கிரசு உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும் துடைத்தெறியப்படும் என்ற அச்சம் அக்கட்சிகளுக்கு மேலோங்கியுள்ளது. தீவிர இந்துத்துவம் பேசும் சிவசேனையைக் கூட அந்த அச்சம் பற்றிக் கொண்டுள்ளது.

இதுதான் இந்தியக் கூட்டணியின் குரலாக வெளிவந்திருக்கிறது. இந்த அழுத்தம் தான் காங்கிரசை சமூக நீதி பேச வைத்திருக்கிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நாமும் கூட்டாட்சித் தத்துவத்தின் தேவையை மக்களிடத்தில் கொண்டு செல்வோம். அதன் வழியாகத் தேசிய இனங்களின் உரிமைகளைப் பரப்புவோம், தமிழ்த் தேசிய உணர்வை மக்கள் மயமாக்குவோம். சுதந்திர தேசங்களை உருவாக்குவோம்.

●

# தமிழ்த்தேசிய இனவுணர்வாளர்கள் ஒன்று சேரவேண்டும்!

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

இந்தியாவில் அடுத்துவரும் காலம் தேசிய இன விடுதலைப் போராட்டக் காலமாகும். இதை யாரும் தடுத்து நிறுத்திவிடமுடியாது.

பஞ்சாபில் இறுதியாக அரசு மேற்கொண்ட முயற்சிகள் எந்த ஓர் ஆளும் பிரிவும் இயல்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளே. எனவே அதுபற்றி யாரும் அச்சமடையவோ கலக்கமடையவோ தேவையில்லை. ஆனால் இப்போராட்டக் கலவரங்களுக்குப் பின்னர் படிநிலை வளர்ச்சியுறும் (பரிணாமமுறும்) மக்கள் மனவெழுச்சிகளுக்கு நாம் முகாமை (முக்கியத்துவம்) அளிக்க வேண்டும்.

ஒரு நாடு எவ்வளவு முகாமையானதோ அவ்வளவு முகாமையானவர்கள் அதன் மக்கள். இனி, மக்களில் ஆளும் பிரிவினராகிய ஆட்சியாளர்க்குச் சார்பாக இயங்குபவர்கள் எவ்வளவு மதிக்கத் தகுந்தவர்களோ, அவ்வளவு மதிக்கத் தகுந்தவர்களே, அவர்களுக்கு எதிரானவர்களும். குடியரசமைப்பின் நேர்மையான அரசியல் இலக்கணம் இது. எனவே, ஆட்சியாளர்க்கு எதிராக மக்களின் ஒரு பகுதியினர் கிளர்ந்து எழுகிறார்களென்றால், அக் கிளர்ச்சியினை அடக்கியொடுக்க அரசினர் முனைவது குடியரசு அமைப்பு முறைப்படி அறியாமையிலும் அறியாமையாகும். கொள்கை முடிவுகள் சித்தாந்தங்கள்) என்றும் சாவதில்லை; அவற்றைச் சாகடிக்கவும் முடியாது.

குடியரசுக் கொள்கைப்படி, இணைப்பாட்சிக்கு எத்துணை மதிப்புண்டோ அத்துணை மதிப்பு தனிப்பிரிவு ஆட்சிக்கும் உண்டு. பல்வேறின மக்களின் மனவுணர்வைப் பொறுத்த செய்திகளே இவை! “இந்தியா ஒருநாடு” என்று நிலக்கோள அமைப்பை வலியுறுத்திப் பேசும் ஆட்சியாளர்கள், மக்களின் அமைப்புக்கும் அதைப் பொருத்திக் காட்டிவிட முடியாது. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடு இந்தியா. இதில் எந்தக் கருத்து வேறுபாட்டுக்கும் இடமில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி. ஆனாலும் ஆட்சியாளர்கள் ஏதோ ஒரு மந்திரமாயப் புரட்டுப் போல், இந்தியா ஓராட்சி முறையில் இயங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர். அதில் தங்கள் தந்நலவுணர்வு தவிர வேறு அடிப்படைகளைக் காரணங்களாக காட்டிவிட முடியாது. இந்த உணர்வும் ஒருமைப்பாடும் ஆட்டங் காண வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதையே பஞ்சாப், அசாம், நாகலாந்து, மிசோரம் முதலிய இனக் கலவரப் போராட்டங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தேசிய இன விடுதலை உணர்வு என்றோ கனிந்து பயன் நல்கியிருக்க வேண்டும். கொளுத்தப்பட்ட வெடி இடையில் அணைந்துவிட்டதுபோல், ஏனோ சூடு மங்கிக் கிடக்கிறது. இதற்கு மூல காரணம் இங்குள்ள பல்முனைப் போராட்ட முயற்சிகளே ஆகும். பல்முனைப் போராட்ட முயற்சிகள் எப்பொழுதும் இனவிடுதலையைப் பின்னடைவு செய்வன ஆகும் என்பதை, இங்குள்ள இன விடுதலைத் தலைவர்களாகத் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் அரசியல், குமுகாயத் தலைவர்கள் உணராமல் இருக்கிறார்கள். உணராமல் இருக்கிறார்களோ, அல்லது உணர்ந்தும் துணியாதவர்களாக இருக்கிறார்களோ, நாம் அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க நேரமில்லை.

தமிழினத்தின் ஒட்டுமொத்த நலமே, தமிழக விடுதலையில்தான் இருக்கிறது என்பதைத் தமிழின மக்களில் பெரும்பாலார் உணர்ந்திருந்தும், இவ் விடுதலை முயற்சிகள் ஏனோ இன்னும் இங்குத் தலையெழுச்சி கொள்ளாமல் இருக்கிறது. இவ்வெழுச்சி காலத்தால் தூண்டப்பெறுவதற்கும், வழிநடத்திச் செல்லப் பெறுவதற்கும் உரிய தலைவர்கள், மக்களைப் பல்வேறு திசைதிருப்பு முயற்சிகளில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் தமிழினம் இன்று எழுச்சி கொள்ளாவிடில், இதன் உள்ளுணர்வும், உந்து வேகமும் காலத்தால் கரியாகிப் போய்விடும் என்று நாம் அஞ்ச வேண்டியுள்ளது.

எனவே, பஞ்சாபியரின் போர்க்குணமும், வீர வெடிப்புகளும் உடனடியாகத் தமிழர்களிடம் தோன்றியாக வேண்டும். அதன் உந்து விசையை ஒருமுகப்படுத்தும் ஒரு கூட்டு முயற்சி, தமிழ்த்தேசிய இன விடுதலையை விரும்பித் தவங்கிடக்கும் இளைஞர்களிடையில் காழ்கொண்டு எழுச்சி பெறுதல் இன்றைய நிலையில் மிக மிக இன்றியமையாதது.

இதுதொடர்பாக, விரைவில் சென்னையில் ஒரு கலந்துரையாடலை நாம் தொடங்கியாக வேண்டும். அம் முயற்சியின் வரவேற்பைப் பொறுத்தது அதன் செயற்பாடு. எனவே, இம்முயற்சியை முழுமனவுணர்வுடன் வரவேற்கும் தனி மறவுணர்வுள்ளங்களும், ஆங்காங்குக் கிளர்ந்துள்ள இன விடுதலைச் சிற்றியக்கங்களும் ஒன்றிணைந்து ஒரு விடுதலைக் கூட்டணியை உருவாக்க முன்வருதல் வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அத்தகைய துணிவான செயல்களுக்குத் தம்மை உள்ளாக்கிக்கொள்ள விழையும் உணர்வாளர்கள் உடனடியாக எங்களுக்குத் தம் உறுதி மொழிகளை வழங்கக் கேட்டுக் கொள்கிறோம்! வெல்க, தமிழ்த்தேசிய இன, நாட்டு விடுதலை முயற்சிகள்!

**[தமிழ்நிலம், இதழ் எண். 39,] சூன், 1984**

# தோழர்கள் சேகர், தமிழோசை, பணிநிறைவு நிகழ்ச்சிகள்



**தி**ருவொற்றியூரில் எம்ஆர்எப் தொழிற்சாலையில்(35 ஆண்டுகள்) பணிபுரிந்து 31.3.2024 அன்று பணி நிறைவு பெற்ற தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் முன்னணித் தோழர் மா சேகர் அவர்களின் பணி நிறைவு நிகழ்வும், பாசிச எதிர்ப்பு கருத்தரங்கமும் 31.3.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள எண்ணூர் பவுண்டரி தொழிலாளர்கள் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வைத் தோழர் ஐ. சிவப்பிரகாசம் (எம்ஆர்எப் தொழிற்சங்க துணைத் தலைவர்) தலைமை ஏற்று நடத்தினார். இந்நிகழ்வில் பாசிச எதிர்ப்பின் வழிகாட்டி தோழர் ஜார்ஜ் டிமிட்ரோவின் படத்தைத் திறந்து தோழர் தியாகு (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்) உரையாற்றினார். தந்தை பெரியாருக்குப் பின் திராவிடர் கழகத்தின் தலைவராக செயல்பட்ட அன்னை மணியம்மையாரின் படத்தைத் தோழர் செ.தமிழரசி அவர்கள் திறந்து வைத்தார். தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் தோழர்களுக்குப் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்திய தமிழக மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் தோழர் பொழிலன் அவர்கள் தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் கடந்த கால சமூக பங்களிப்பினை எடுத்துரைத்து இது மேலும் தொடர வேண்டும் என்று உரையாற்றினார். நிகழ்வில் பாசிச எதிர்ப்பின் வழிகாட்டித் தோழர் ஜார்ஜ் டிமிட்ரோவ் அவர்கள் எழுதிய தொழிற்சங்கத்தின் கடமைகள் என்ற நூலை எம்ஆர்எப் தொழிற்சங்கத் தலைவர் தோழர் எழில்கரோலின் அவர்கள் வெளியிட இடது தொழிற்சங்க மையத்தின் தோழர் ஏ.எஸ்.குமார் அவர்கள் பெற்றுக்கொண்டு கருத்துரையாற்றினார்கள். எம்.ஆர்.எப் தொழிற்சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் தோழர் சத்தியமூர்த்தி, தோழர் மனிதி செல்வி, பெரம்பலூர் எம்.ஆர்.எப் தொழிற்சங்கத்தின் முன்னணி தோழர் ஐயப்பன், உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்ற தோழர் நா.துரைராஜ், தமிழ்த் தேச மக்கள் முன்னணி தோழர் செந்தில், தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி தோழர் செல்வமணியன், அம்பேத்கர் சிறுத்தைகள் தோழர் தெய்வமணி மற்றும் வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் கருத்துரை மற்றும் வாழ்த்துரை நிகழ்த்தி பணி நிறைவு பெற்ற தோழர் மா. சேகர் அவர்களுக்கும், அவருடைய வாழ்விணையர் தோழர் செ.தமிழரசி அவர்களுக்கும் சிறப்பு செய்ய நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கத்தில் நிமிர்வு கலைக்குழுவின் பறை இசை நிகழ்ச்சியும், சக்தி கலைக்குழுவின் பெண்கள் நடன (சங்கே முழங்கு) நிகழ்ச்சியும் நடைபெற்றது. தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் பொறுப்பாளர்கள் இந்நிகழ்வைச் சிறப்பாக ஒருங்கிணைத் திருந்தனர். நிகழ்வு நடைபெற்ற அரங்கத்தில் தந்தை பெரியார் அண்ணல் அம்பேத்கர், காரல் மார்க்ஸ் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன், விசிக தலைவர் தோழர் திருமாவளவன் ஆகியோர் கருத்துகளை எழுத்து வடிவங்களாக வைத்திருந்தனர்.

திருவொற்றியூர் எம்.ஆர்.எப் ஆலையில் 40 ஆண்டுகளாக பணிபுரிந்து தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தைத் தொடங்கியவரும், எம்.ஆர்.எப் தொழிற்சங்கம் நடத்திய போராட்டங்களை முன் நின்று நடத்தி வெற்றி பெறச் செய்ய வைத்தவரும், வடசென்னைப் பகுதியில் தொழிலாளர்களைச் சமூக போராட்டங்களில் ஈடுபட வைத்த முன்னோடியுமான தோழர் ஐ சிவப்பிரகாசம் என்கிற தமிழோசை பணி நிறைவு விழா திருவொற்றியூர் பட்டினத்தார் கோயில் தெருவில் உள்ள எம்ஆர்எப் தொழிலாளர் சங்க கட்டிடத்தில் தொழிலாளர் நாளன்று (01.5.2024) நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தோழர் ஆ.பாலா தலைமையேற்று நடத்தினார். தொழிலாளர் பிள்ளைகளின் சிலம்பாட்டம்(செல்வி சாதனா) தற்காப்புப் பயிற்சி, மற்றும் நாட்டியம் (தமிழ்ச்செல்வி) நடைபெற்றது. நிகழ்வில் முத்தாய்ப்பாக அண்ணல் அம்பேத்கர் எழுதிய ஜோத்-பாட்-தோடக் மண்டலுரை என்ற நூலை எம்ஆர்எப் தொழிற்சங்கத் தலைவர் தோழர் எழில் கரோலின் அவர்கள் வெளியிட தமிழக மக்கள் முன்னணித் தோழர் பொழிலன் பெற்றுக்கொண்டு கருத்துரையாற்றினர். வாழ்த்துரையாகத் தோழர் ஜெ.சி சிதம்பரநாதன் (மக்கள் விடுதலை), திரைப்பட இயக்குநர் தோழர் பொன் குமரன், உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்ற தோழர் இரா சம்பத், ஜனநாயக தொழிற்சங்க மைய தோழர் ஆதித்தமிழன், எம்.ஆர்.எப் தொழிற்சங்க முன்னாள் பொதுச்செயலாளர் தோழர் சத்தியமூர்த்தி, அம்பேத்கர் சிறுத்தைகள் தோழர் தெய்வமணி ஆகியோர் உரையாற்றினர். தோழர் தமிழோசை அவர்களின் அம்மா செல்லத்தாய் அவர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது. தோழர் தமிழோசைக்கும் அவருடன் ஓய்வுபெற்ற தோழர் பாஞ்சாலி ராஜன் அவர்களுக்கும் பகுதியில் உள்ள தொழிலாளர்களால் சிறப்பு செய்யப்பட்டது. வாழ்த்துரையாற்றிய தோழர்களுக்குத் தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் சார்பாக வரலாற்று ஆய்வறிஞர் தொ. பரமசிவம் அவர்கள் எழுதிய தென்புலத்து மன்பதை என்ற நூல் வழங்கப்பட்டது.






# ஐயா பழ. நெடுமாறன் இந்தியா கூட்டணியை ஆதரித்தது சரியா?

**தோழர் பொழிலன்,** *தமிழக மக்கள் முன்னணி*

ஐயா நெடுமாறன் அவர்கள் இந்தியா கூட்டணியை ஆதரித்து அறிக்கைவிட்டவுடன் அவரைக் கண்டித்தும் ஏளனம் செய்தும் கருத்துகூறும் ஈழத் தமிழர்கள் சிலர், அவர் பாஜக தலைவர்களை அழைத்து உறவு கொண்டாடிய போது அதைப் பற்றி ஒன்றும் கருத்தறிவிக்காமல் உள்ளத்தால் மகிழ்ந்து கொண்டிருந்தனர்..

பொதுவாகவே ஈழத் தமிழ் இயக்கங்களுக்குத் தமிழ்நாட்டு அரசியல் பற்றி.. தமிழ்நாட்டின் மக்கள் விடுதலையைப் பற்றிய அக்கறையைவிட இந்தியநாட்டைப் பற்றிய அக்கறை மிகுதி..

தமிழ்நாட்டு மக்களின் நட்பை விட இந்திய அரசின் நட்பை அவர்கள் பெரிதும் மதிக்கிறவர்களாகவும் பாராட்டுபவர்களாகவுமே இருந்து வந்திருக்கின்றனர்..

தோழர் தமிழரசன் தமிழ்நாட்டு விடுதலை தொடர்பான இயக்கச் செயற்பாடுகளில் இருந்த காலத்தில்.. அவருடன் தொடர்பு கொள்ளவும் அவரைப் போன்றதான அசாம் விடுதலை இயக்கங்களோடோ, பஞ்சாப் விடுதலை இயக்கங்களோடோ, காஷ்மீர விடுதலை இயக்கங்களோடோ தொடர்பு கொள்ள தோழர் பாலன் தலைமையிலான தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை போன்ற ஓரிரண்டு இயக்கங்கள் மட்டுமே விரும்பினவே அல்லாமல், ஈழத் தமிழ் இயக்கங்கள் பிற எவையும் விரும்பவும் இல்லை, உடன்படவும் இல்லை..

பாவலர் காசி ஆனந்தன் அவர்கள் 'ஈழ இந்திய நட்புறவுக் கழகம்' என்று ஓர் அமைப்பை உருவாக்கி இருந்தார்.. நாம் அவரிடம், "தமிழ்நாட்டு இயக்கங்கள் சார்ந்த நாங்கள் 'தமிழ்நாடு ஸ்ரீலங்கா நட்புறவுக் கழகம்' - என்று ஓர் அமைப்பை ஏற்படுத்தினால் அதை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுவீர்கள்.. அப்படித்தானே நீங்கள் உருவாக்கி இருக்கிற ஈழ இந்திய நட்புறவுக் கழகம் - எங்களுக்கு உடன்படாத நிலையில் அல்லவா இருக்க முடியும்" என்று கூறினோம்.. அவர் சரியான விடையை இதுவரை அளிக்கவில்லை..

ஈழத் தமிழர்கள் இந்தியாவை நட்பாக எண்ணுவது தமிழ் ஈழத்துக்கு மட்டுமன்றி தமிழ்நாட்டிற்கும் கேடானது என்பதை உணர்ந்தாக வேண்டும்..

இந்தியா என்பது பாஜக அல்லது காங்கிரஸ் என்கிற அளவில் அரசியல் கட்சியாக மட்டுமே மதிப்பிடக்கூடியதில்லை..

இந்தியாவிற்காக.. பாரதத்திற்காக இருக்கக்கூடிய.. தேசிய இன உரிமைகளை மறுக்கக்கூடிய எந்தக் கட்சியும் அது மார்க்சியத்தின் பெயரால் இருக்கக்கூடிய கட்சியாக இருந்தாலும் கூட அந்தக் கட்சிகள் அனைத்தும் இந்தியப் பாசிச பார்ப்பனியக் கருத்துடையவையே..

அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகையில் மிகுதி குறைவு இருக்கலாம்.. ஆனால் அவை யாவும் பாசிச பார்ப்பனிய உணர்வுடையவையே..

திமுகவைப் பொறுத்த அளவு 1963-லேயே அது தமிழ்நாட்டு உரிமைகளுக்கான கோரிக்கையைப் படிப்படியாகக் கை நெகிழ்த்து விட்டக் கட்சியாகிப்போனது..

வடவர் நம்மவரும் அல்லர் நல்லவரும் அல்லர்..
அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு..

என்றெல்லாமும் கூறியவர்கள் தாம்.. பின்னாளில் நேருவின் மகளே வருக நிலையான ஆட்சி தருக.. - என்றும்,

மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன் - என்றெல்லாம் மழுப்பிப் பேசத் தொடங்கினர்.. எண்ணற்ற ஊழல்கள் செய்தனர்..

இன்றைய இந்தியத் தேர்தல் அரசு அமைப்புக்கு அடிமைப்பட்டு போகிற அனைவரும் செய்யக்கூடிய அயோக்கியத்தனங்கள் அவை. அதற்குக் கட்சிப் பெயர், கோட்பாடு என்றெல்லாம் கிடையாது..

அது இந்தியத்தின் பெயரிலும் நடக்கும்.. திராவிடத்தின் பெயரிலும் நடக்கும்.. அதே இந்தியத் தேர்தல் அரசியல் புதைச்சேற்றில் மூழ்கினால் தமிழ்த்தேசத்தின் பெயரிலும் நடக்கும்..

1949 இல் தொடங்கினாலும் இந்தியத் தேர்தலில் மூழ்கி போன பிறகே ஊழலும் ஏமாற்றுதலும் செய்யத் தொடங்கியது திமுக..

ஆனால், 2009 இற்குப் பின் 2010 இல் தோற்றம் கொண்ட நாம் தமிழர் கட்சி தமிழ்த்தேசம் பேசிக்கொண்டே இந்தியத் தேர்தல் புதைச்சேற்றில் மூழ்கிய நிலையில், இன்னும் ஒரு சட்டப்பேரவைத் தொகுதி கூட வெற்றி பெறுவதற்கு முன்பே இந்தியப் பார்ப்பனியத்தை எதிர்க்காமல், 'கார்ப்பரேட்' முதலாளிய நிறுவனங்களுடன் உறவாடிக் கொண்டு ஊழலும் ஏமாற்றுதலும் செய்யத் தொடங்கி விட்டதை உணர வேண்டும்..

ஆக.. தமிழ்த்தேசம் பேசுவது.. தமிழ்த் தேச விடுதலை உரிமையைப் போராடி பெறுவதற்காகவே அல்லாமல் இந்தியத் தேர்தலில் ஈடுபட்டுப் பொறுக்கித் தின்பதற்காக அல்ல..

இந்தியாவை அம்பலப்படுத்தாமல்.. இந்தியப் பாசிசப் பார்ப்பனியத்தை எதிர்த்து நின்று போராடாமல்.. அம்பானி அதானி உள்ளிட்ட கார்ப்பரேட் முதலாளிகளை வெளியேற்றிடாமல்.. தேசிய இனங்கள் விடுதலை பெற முடியாது.. தமிழ்த்தேசம் தன் முற்றதிகாரத்தை நிலைநாட்டிட முடியாது..

அந்த வகையில்.. இன்றைக்கு.. இந்தியப் பாசிச பார்ப்பனியத்தின் அதிகார முகடாகத் தலைவிரித்தாடுகிற ஆர்.எஸ்.எஸ்.ஐ, பா.ஜ.க.வை முற்றும் முழுமையாகத் துடைத்தெறிந்தாக வேண்டும்..

அதற்குத் தேசிய இனங்களின் உரிமை உணர்வு கொண்ட இயக்கங்கள் பொறுப்பெடுத்து அனைவரையும் இணைக்கிற ஒரு பெரும் முயற்சியை முன்னெடுத்தாக வேண்டும்..

இணைக்கப்படுகிற கட்சிகளிடையே கொள்கைகளில் செயல்பாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம்.. ஆனால், தேசிய இனங்களின் (மாநிலங்களின்) உரிமைகளுக்காகப் போராடுவதிலும், பாசிச பார்ப்பனிய இந்திய அதிகாரத்தை எதிர்க்கிற அடிப்படையிலும், அம்பானி அதானி உள்ளிட்ட கார்ப்பரேட் முதலாளிகளை விரட்டி அடிக்கிற நோக்கத்திலும் ஒப்புதலும் உறவும் இருந்தால் போதுமானது.. என்பதில் தெளிவு கொள்வோம்..

பாவலர் காசி அனந்தன், சச்சிதானந்தன் போன்ற ஈழத் தமிழ்த் தலைவர்கள் பலர் பாஜகவின் பாதம் தாங்கிகளாகச் செயற்பட்டுக் கொண்டு தமிழ் ஈழத்தையும் கெடுத்து, தமிழ்நாட்டு அரசியலையும் சீர் குலைத்து வருகிற அண்மைச் சில ஆண்டுக் காலச் சூழலில், பாஜகவின் உறவை ஐயா நெடுமாறன் அவர்கள் உதறித் தள்ளியதை வரவேற்போம்.. (மற்றபடி அவரின் கருத்துகளில் நடைமுறைகளில் பல மறுப்புக் கருத்துகள் நமக்கு இருப்பது என்பது வேறு)

## தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்திற்கு

தோழர்களே! நமது இயக்கத்தின் மூத்த உறுப்பினரும், அரசியல் வழிகாட்டியுமான தோழர் மா. சேகர் அவர்களுக்குப் பணி ஓய்வு பாராட்டு விழாவினை நமது தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் சார்பில் 31.03.24 அன்று மிகச்சிறப்பாக நடத்தினோம். இந்நிகழ்வில் நமது வேண்டுகோளை ஏற்ற (சால்வையை தவிர்த்த) தொழிலாளர் தோழர்களும் வடசென்னைத் தொழிற்சங்கங்களும் சமூக இயக்கங்களை சேர்ந்த தோழர்களும் அளித்த நன்கொடையான உரூ 26151 தொகையினை,

1) பொள்ளாச்சி தாய் தமிழ்த் தொடக்கப்பள்ளிக்கு உரூ 16151 - ம்

2) கோவை **தோழர் இராசகோபால்**(கால் பந்து விளையாட்டு வீரர்) அவர்களின் சிறுநீரக மாற்று சிகிச்சைக்காக உரூ 5000 - ம்

(3) தமிழ்நாடு இதழ் வளர்ச்சி நிதிக்காக உரூ 5000 - ம்,

தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் சார்பில் நன்கொடையாக வழங்கப்பட்டது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுடன் பொதுச்செயலாளர்
**தொழிலாளர் சீரமைப்பு இயக்கம்**

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| திரு. தென்முகநம்பி | 1000 |
| முனைவர் முத்தமிழ் | 1000 |
| தோழர் செங்குட்டுவன் | 1000 |
| திரு. அன்புநிதி | 2000 |

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005

# திருக்குறளைத் தமிழ்நாட்டின் நூலாக தமிழ்நாட்டு அரசு அறிவிக்க வேண்டும்!

**திருக்குறள் என்று உலகில் எங்கு எவர் சொன்னாலும் தமிழ்நாடு என இணைத்து நினைவுக்கு வரும்படிச் செய்யவேண்டும்..**

**இலெனின் என்றவுடன் சோவியத்து உருசியாவும், மாவோ என்றவுடன் சீனாவும், சேக்சுபியர் என்றவுடன் இங்கிலாந்தும் நினைவுக்கு வருவது போல் திருக்குறள் என்றுவுடன் தமிழும் தமிழ்நாடு நினைவுக்கு வரவேண்டும்..**

**திருக்குறளைத் தேசிய நூலாக்க வேண்டும் எனப் பொதுப்பட முழங்குவது தவறு..**

**இன்றைக்குத் தேசியம் என்பது இந்தியா என்பதாகவே உணரப்பட்டிருக்கிறது..**

**இந்தியாவின் தேசிய நூலாகத் திருக்குறளைக் கொண்டு வர வேண்டும் எனக் கோரிக்கை வைப்பது சரியன்று..**

**இந்தியா ஏற்கனவே வேதங்களையும், புராணங்களையும் சாஸ்திரங்களையும் தலை மேல் தூக்கிக்கொண்டாடி வருகிறது..**

**அவற்றோடு திருக்குறளையும் தூக்கிக் கொண்டாட வேண்டும் என நாம் கேட்பது திருக்குறளை இழிவுபடுத்துவது..**

**திருக்குறளை இந்தியாவின் நூலாக ஏற்றால், ஆரிய வேத, புராண, சாஸ்திரக் குப்பைகளை இந்தியா தூக்கி வீச வேண்டும்..**

**இந்தியா என்பது பார்ப்பனிய பாசிசமாக இருக்கிற வரை அது, வேத புராண சாஸ்திரங்களை மறுக்காது..**

**எனவே தமிழ் ஆர்வலர்கள், திருக்குறள் ஆர்வலர்கள் திருக்குறளைத் தேசிய நூலாக்க வேண்டும் எனும் கோரிக்கையை விடுத்துத் திருக்குறளைத் தமிழ்நாட்டின் நூலாக்க வேண்டும் என்றே வலியுறுத்தவேண்டும்!**

# பாட்டாளித் திருவிழா



மே 1 சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அத்திவெட்டி மறவக்காட்டில் வாட்டாக்குடி இரணியன் அரங்கில் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் சார்பில் பாட்டாளித் திருவிழா நடைபெற்றது.

- நுகர்வுக் கலாச்சாரத்தில் சிக்கி தனது உள்ளடக்கத்தை இழந்து வெறும் கேளிக்கை கூத்துகளாகவும், குடி- கும்மாளக் கொண்டாட்டங்களாகவும் பல மக்கள் விழாக்கள் சீரழிந்து நிற்கின்றன.
- இந்த நிலையில் வழிவிலகல் ஏற்பட்டுத் திசை மாறிச் செல்லும் இளைய சமுதாயத்தையும், உழைக்கும் வர்க்கத்தையும் நுகர்வுப் பண்பாட்டிலிருந்து மீட்டு ஒரு சோசலிசப் பண்பாட்டிற்குள் அடி யெடுத்து வைக்க உதவும் ஒரு வெள்ளோட்டமே இந்தப் பாட்டாளித் திருவிழா!
- கார்ப்பரேட் கம்பெனிகளின் பிடியில் சிக்கியுள்ள இந்திய ஒன்றிய முதலாளிய பாசிச அரசுக்கும் அதற்கும் கீழ் அதிகாரம் ஏதும் இன்றி இயங்கும் மாநில அரசுகளுக்கும் மாற்றாக ஒரு சோசலிச அரசைக் கட்டியெழுப்ப முனையும் மானமுள்ள இந்தியர்களின் முன்னெடுப்பு இது. மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைக் காக்கவும் புரட்சிகரப் பண்பாட்டை ஏற்கவும் முயற்சி செய்யும் தன்மானத் தமிழர்களின் திருவிழா இது.
- சுரண்டும் பண்பாட்டை ஒட்டி சோசலிசப் பண்பாட்டை நாட்ட அறைகூவி அழைக்கும் விதமாக இந்த பாட்டாளித் திருவிழா கொண்டாடப்பட்டது.
- தோழர்கள் ஆ. மொழியமுதன், மருது குமார் ஆகியோர் தலைமை ஏற்று நடத்தினார்கள் தோழர் மதுக்கூர் கோபி வரவேற்புரை ஆற்றினார்
- சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அவர்களுக்கு ஏற்ப விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.
- தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் தோழர்களும் பொதுமக்களும் சர்வதேச பொதுவுடைமைப் போராளிகளின் படங்களை ஏந்திய வாறு தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் நிதிச் செயலாளர் தோழர் ஆ. மொழியமுதன் விடுதலைச் சுடரை ஏந்திய வாறு முக்கிய வீதிகளில் ஊர்வலமாக வந்தனர். இயக்கத்தின் கொடியைத் தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் தோழர் மருது குமார் ஏற்றினார்.
- பொதுவுடைமைப் போராளி தியாகத் தோழர் பூசைத்துரை அவர்களின் படத்தை மேஜிக் நிபுணர் தோழர் மதுரை வேம்பன் அவர்கள் திறந்து வைத்தார். இயக்கத் தோழர்களும் பொதுமக்களும் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர். பாட்டாளிக் காவலர் விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.
- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) தோழர் மகாலிங்கம் அவர்களுக்குத் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் மாரி போஸ்ராஜன் பாட்டாளிக் காவலர் விருதை வழங்கிச் சிறப்பித்தார். திராவிடர் கழகத்தின் பட்டுக்கோட்டைத் தலைவர் தோழர் சிற்பி சேகர் அவர்களுக்குப் பாட்டாளிக் காவலர் விருதைத் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் உறுப்பினர் தோழர் சாம்பு பழனிவேல் அவர்கள் விருதை வழங்கிச் சிறப்பித்தார்.
- தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தங்க குமரவேல் தொடக்க உரையாற்றினார். மக்கள் தமிழகம் கட்சியின் தலைவர் தோழர் நிலவழகன் நாம் மனிதர் கட்சியின் நிறுவனத் தலைவர் தோழர் தவ்ஃபீக், மக்கள் அதிகாரம் அமைப்பின் தோழர் தம்பிக்கோட்டை மாரிமுத்து, சுப முத்துக்குமார் பாசறை ஒருங்கிணைப்பாளர் தோழர் சத்தியகாந்தி, சமூக ஆர்வலர் தோழர் அருள்தாஸ், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தோழர் சிற்பி சேகர், தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர் தோழர் கவி முருகன், தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் உறுப்பினர் தோழர் சாம்பு பழனிவேல் உள்ளிட்டோர் வாழ்த்துரை ஆற்றினார்கள், உலக புகழ் பெற்ற தந்திரவியல் கலைஞர்கள் மதுரை வேம்பன் , திருச்சி அம்புட்டிபாபா ஆகியோரின் மந்திரமா ? தந்திரமா ? நிகழ்ச்சியை நடத்தினர், விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது, இறுதியாகத் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் மதுக்கூர் ஒன்றிய அமைப்பாளர் தோழர் ராஜ பெரமையன் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் தோழர்களும் கலந்து கொண்டனர்.